பக்கங்கள்:-30

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 17 | ஞாயிற்றுக்கிழமை | 30.06.2024 | அதிர்வு 334

## இரணைமடுக் குளத்தில் மூழ்கி சிறுவன் மாயம்!

கிளிநொச்சி – இரணைமடுக் குளத்தில் நீராடச் சென்ற 14 வயது சிறுவன் ஒருவர் காணாமல்போயுள்ளார்.

மேற்படி சிறுவன் அவரது சகோதரன் மற்றும் நண்பர்களுடன் 06



பட்டப்பகலில் முகத்தை மறைத்தவாறு வாள்களுடன் மர்மநபர்கள் நடமாட்டம்

# மிகவும் பயங்கரமான சூழலில் யாழ்ப்பாணம்

## பொலிஸாரும் படையினரும் என்ன செய்கின்றனர் என்று சிறீதரன் கேள்வி

(எஸ்.நிதர்ஷன்)

“யாழ்ப்பாணத்தில் பட்டப்பகலில் முகத்தை மறைத்தவாறு வாள்களுடன் இனந்தெரியாத நபர்கள் நடமாட முடியும் என்றால் யாழில் சிவில் நடவடிக்கைகள், பொலிஸார், இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையின் செயற்பாடுகள் எவ்வாறு இருக்கின்றன என்பதைப் பார்க்கலாம்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார். 06



## ரணிலுக்கு ஆதரவு வழங்குமாறு மொட்டுக்கு இந்தியா அழுத்தம்!

### ராஜபக்ஷ குடும்பத்தின் பேச்சாளர் தெரிவிப்பு



“வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கு இந்தியா அழுத்தம் கொடுத்து வருகின்றது.”

– இவ்வாறு ராஜபக்ஷ குடும்பத்தின் பேச்சாளராகக் கருதப்படும் இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க 06




இதுவரை இருந்த சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம், தமக்கு அறுபது வயதுக்குப் பின்னரும் பதவி நீடிப்பு வழங்கச் செய்யும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சிக்கு இடமளித்துப் பார்த்திருக்காமல் தமது அறுபது வயது முடிந்த அன்றே ஓய்வு பெற்று வீட்டுக்குச் சென்று விட்டார்.

ரணிலின் அரசியல் இழுபறி நாடகத்தில் தமது பெயரைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்க இடமளிக்காமல் தந்திரமாகவும் சரியாகவும் செயற்பட்டிருக்கின்றார் சஞ்சய் ராஜரத்தினம்.

தற்போதைய பிரதம நீதியரசரின் பதவிக் காலம் இன்னும் 5 மாதங்களில் முடிவடையப் போகின்றது. அவர் அப்போது 65 வயதில் சட்டப்படி ஓய்வு பெறுவார். 06



### பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பான விடயங்களைக் கையாள

# தமிழ்த் தேசியப் பேரவை உதயம்!

**(கே.வசந்தன்)**

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காகத் தமிழ்த் தேசியப் பேரவை எனும் அமைப்பு உதயமாகியுள்ளது என்று அரசியல் ஆய்வாளரும் தமிழ் மக்கள் பொதுச் சபை உறுப்பினருமான நிலாந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் நேற்று வவுனியாலில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் தமிழ் மக்கள் பொதுச் சபை உறுப்பினர்களுக்கும் இடையிலான கலந்துரையாடலின் பின் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக தமிழ்த் தேசியக் கட்சிகளும், மக்கள் அமைப்பாகிய தமிழ் மக்கள் பொதுச் சபையும் இணைந்து கலந்துரையாடி ஒரு உடன்பாட்டுக்கு வந்துள்ளோம். அந்த உடன்பாட்டின் அடிப்படையில் கட்சிகளும், மக்கள் பொதுச் சபையும் இணைந்து ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்கியுள்ளது. அந்த பொதுக் கட்டமைப்பு தமிழ்த் தேசிய பேரவை என அழைக்கப்படும். தமிழ்த் தேசியப் பேரவையின் கூட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி இடம்பெறும். இந்தக் கூட்டத்தில் உத்தியோகபூர்வமாக புரிந்துணர்வு உடன்படிக்கை கட்சிகளுக்கும், மக்கள் அமைப்புக்கும் இடையில் கைச்சாத்திடப்படும். அதன் பின் தேவையான உப குழுக்களை உருவாக்கி ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் செயல் பூர்வமாக முன்னெடுக்கப்படும்.

தமிழ்த் தேசியப் பேரவை எனும் பொது கட்டமைப்பு தற்போது உருவாக்கப்பட்டுள்ளது. அந்தப் பொதுக் கட்டமைப்பு உப கட்டமைப்புக்களை உருவாக்கும். அதில் ஒன்று யார் தமிழ்ப் பொது வேட்பாளர் என்பதைக் கண்டுபிடிக்கும். இன்னுமொரு உப கட்டமைப்பு தேர்தல் அறிக்கை என்ன என்பதை இறுதி செய்யும்.” – என்றார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் தலைவருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்,

“தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயத்தில் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளும், சிவில் அமைப்புக்களும் ஒன்று கூடி தங்களை ஒரு அமைப்பாகப் பிரகடனப்படுத்தியுள்ளார்கள். தற்போது இரு தரப்பும் ஒன்றிணைந்து ஒரே அமைப்பாகத் தமிழ்த் தேசியப் பேரவையாக செயற்பட இணங்கியுள்ளன.

வருகின்ற ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு – கிழக்கு சார்ந்து தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தவதாகத் தீர்மானித்துள்ளோம். அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்வதற்கான திகதி தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் பின் தேவையான குழுக்கள் நிறுவப்படும். அந்தக் கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட்டு பொது வேட்பாளர் விடயம் கையாளப்படும். அந்தவகையில் இது ஒரு முக்கியமான கூட்டம். தமிழ்த் தேசியப் பரப்பில் பெரும்பான்மையான கட்சிகள் இதில் அங்கத்துவம் பெற்றுள்ளன.

பொதுக் கட்டமைப்பான தமிழ்த் தேசியப் பேரவைதான் இனி பொது வேட்பாளரைத் தெரிவு செய்யும். தேர்தல் பிரசாரத்தையும் அதுவே முன்னெடுக்கும். தமிழ்த் தேசியப் பேரவையின் உறுப்பினர்கள் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவர். இது அரசியல் மயப்படுத்தப்பட்ட விடயம்தான். எதிர்வரும் 6 ஆம் திகதிக்குப் பின் உத்தியோகபூர்வ நடவடிக்கைகள் எடுக்கப்படும்.” – என்றார்.

இதில் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ), தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்), தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, தமிழ்த் தேசியக் கட்சி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னனி (ஈ.பி.ஆர்.எல்.எப்.), தமி











# கீரிமலை நகுலேஸ்வரப் பெருமான் ஆலயத்துக்கு லண்டனில் தயாரான கண்டாமணி வருகின்றது!



கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்தில் நிறுவப்படுவதற்காக பாரிய காண்டாமணி லண்டனில் தயாராகியுள்ளது.

43 அங்குல விட்டம், 34 அங்குல உயரம் மற்றும் 750 கிலோ எடை கொண்ட இந்த அழகான காண்டாமணி நற்பதாயிரம் பிரித்தானியா பவுண்கள் (இலங்கை பணம் சுமார் ஒரு கோடி 60 லட்சம் ரூபா) செலவில் தயார் செய்யப்பட்டுள்ளது.

அமரர் இராஜஸ்ரீநகுலேஸ்வரக் குருக்கள் ஐயா முதல் முறையாக 1989 ஆண்டு லண்டன் சென்ற சமயம் கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்திற்கு லண்டனில் காண்டாமணி ஒன்று செய்யவேண்டும் என்ற திருப்பணியை ஆரம்பித்து வைத்தார்.

பல வித காரணங்களால் 35 ஆண்டுகள் கழித்து, குருக்கள் ஐயா சென்ற ஆண்டு மறைந்த பின்னர், இந்த ஆண்டு இம்முயற்சி நிறைவேறுகின்றது.

மணியின் அனைத்து வேலைகளும் நிறைவுபெற்று, லண்டனில் மணி வார்க்கப்பட்ட தொழிலகத்தில் திருக்கைங்கரியம் புரிந்த சைவப்பெரியோர்கள், தொழிலகத்தின் பொறுப்பாளர் உள்ளிட்ட பெருந்தகையோர் சூழ, கயிலைக்குருமணி நாகநாதசிவம் சிவாச்சார்யார் தலைமையில் விசேட பூஜை பிரார்த்தனை கடந்த வியாழக்கிழமை 27 ஆம் திகதி நடைபெற்றது.

இத்தகவல்களை வெளியிட்ட அகில இலங்கை இந்து கலாச்சார பேரவையின் தலைவர் சிவாகம கலாநிதி. சிவஸ்ரீ. கு.வை. க. வைத்தீஸ்வர குருக்கள், மிக விரைவில் இக்காண்டாமணி கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்தில் நிறுவப்பட்டு மகா கும்பாபிசேஷகம் நடைபெறத் திருவருளும் குருவருளும் ஒருசேர கிடைத்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இத்திருப்பணியை ஆரம்பித்து மிகவும் குறுகிய காலத்தில் அதனை நிறைவு செய்த பிரித்தானியா கீரிமலை சிவன் கோயில் அறக்கட்டளை நிர்வாகத்தினரைப் பாராட்டி மகிழ்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# பாலித ரங்கே பண்டாரவின் மகன் பிணையில் விடுவிப்பு



ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் பாலித ரங்கே பண்டாரவின் மகனான, யசோத ரங்கே பண்டார நேற்று கைது செய்யப்பட்டிருந்த நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் அலிமங்கட பிரதேசத்தில் இவர் பயணித்த கார் வீதியை விட்டு விலகி ஓட்டோ ஒன்றுடன் மோதி விபத்துச் சம்பவம் ஒன்று இடம்பெற்றிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பிலேயே அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

விபத்தில் ஓட்டோச் சாரதி படுகாயமடைந்து புத்தளம் ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தாங்கள் மேற்கொண்டு வருகின்றனர் என கருவலகஸ்வெவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கடற்படையினரின் படகுகளையே தாக்கும் அளவுக்கு வலுமிக்க ட்ரோலர் படகுகள் இந்திய மீனவர்களிடம்!

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. சுட்டிக்காட்டுகின்றார்



(கே.வசந்தன்)

கடற்படையின் படகுகளைத் தாக்கும் அளவுக்கு வலுமிக்க ட்ரோலர் படகுகளை இந்திய மீனவர்கள் பயன்படுத்துகிறார்கள் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேசியக் கட்சிகள், சிவில் அமைப்புக்கள் எனப் பலமான ஒரு அணி இணைந்திருக்கிறார்கள். இது தொடர்ந்து பயணிக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய விருப்பம். ஒற்றுமையை வலுப்படுத்தும் செயற்பாட்டை செய்ய வேண்டும். புரிந்துணர்வு விடயம் தொடர்பில் பேசியுள்ளோம். அதன் பின்னரே வேட்பாளர் மற்றும் போட்டியிடும் கட்சி, சின்னம் தொடர்பில் தீர்மானிக்க முடியும். கட்சி, சின்னம் முடிவுக்கு வந்த பின்னரே வேட்பாளர் விடயம் எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

இதன்போது கச்ச தீவு தொடர்பில் ஊடகவியலாளர் கேள்வி எழுப்பிய போது –

எங்களது மீனவர்களது பிரச்சினைகள் ஏராளம். கடற்படையினர் விசை கூடிய பெரிய படகுகளையே பயன்படுத்துவார்கள். அவ்வாறான ஒரு நிலையில் ஒரு கடற்படை வீரர் மரணிக்கும் அளவுக்கு கடலில் நடந்திருக்கு என்றால் இந்திய மீனவர்கள் எவ்வளவு வலுமிக்க ட்ரோலர் படகுகளை பயன்படுத்துகிறார்கள் என்பது தெரிகிறது.

அத்துடன் இலங்கைக்குச் சொந்தமான கச்சதீவை இந்தியாவிற்கு கொடுப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. இது தொடர்பில் எவ்வாறான ஒப்பந்தம் செய்துள்ளார்கள் என்பது இன்னும் வெளிப்படையாக வரவில்லை. இதனை நாம் வழங்க ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம். – எனத் தெரிவித்தார்.







# ஓரினச் சேர்க்கையாளர்களை அச்சுறுத்தி கப்பம் அறவிட்டு வந்த மூன்று பேர் கைது!

ஓரினச் சேர்க்கையாளர்களை அச்சுறுத்திக் கப்பம் பெற்றனர் எனக் கூறப்படும் மூன்று சந்தேக நபர்கள் மிரிஹான தலைமையக பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் நீண்ட காலமாக இவ்வாறு அச்சுறுத்திக் கப்பம் பெற்று வந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் மூவரும் சமூக ஊடகமொன்றில் அறிமுகமான பண்டாரவளை பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய நபரொருவரிடம் அவரைப் போன்று பல ஓரினச்சேர்க்கையாளர்களை அறிமுகம் செய்து வைப்பார்கள் எனக் கூறி புறக்கோட்டை, வெஹரகந்த பிரதேசத்தில் உள்ள வீடொன்றுக்கு வரவழைத்துள்ளனர்.

பின்னர், சந்தேக நபர்கள் அந்த நபரைத் தாக்கி நிர்வாணமாக, காணொலி எடுத்து அதனை இணையத்தில் வெளியிடுவார்கள் எனக் கூறி அச்சுறுத்தி ஒரு லட்சம் ரூபா கப்பம் கோரியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட நபர் இது தொடர்பில் மிரிஹான தலைமையக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததமையையடுத்து, சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சஞ்சய் ராஜரத்தினத்தை அதுவரை சட்டமா அதிபர் பதவியில் வைத்திருந்து, பிரதம நீதியரசர் ஓய்வு பெறும் போது அச்சமயம் அந்தப் பதவிக்கு சட்டமா அதிபரை நியமிப்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தேசம் என்றும், அதற்காகவே சட்டமா அதிபர் பதவியில் சஞ்சய் ராஜரத்தினத்தின் பதவி நீடிப்பை ஜனாதிபதி விரும்பினார் என்றும் காரணம் கூட கூறப்பட்டது.

ஆனால் அது அபத்தமான காரணம் – பொருத்தமற்ற நியாயப்பாடு – என்பது தான் உண்மை.

இன்னும் ஐந்து மாதங்களுக்குப் பின்னர் வெற்றிடமாகக் கூடிய பிரதம நீதியரசர் பதவிக்கு யாரை நியமிப்பது என்பது அப்போது ஜனாதிபதியாக இருப்பவரின் அதிகாரத்துக்கும் கருத்துக்கும் உட்பட்ட விடயம்.

மூன்று மாதங்களில் நடக்கப்போகின்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுபவர்தான் அப்போது ஜனாதிபதியாக இருப்பார். அது ரணில் விக்கிரமசிங்க தானா என்பது இப்போது தெரியாது. தேர்தல் முடிவடையும் வரை அதற்குக் காத்திருக்க வேண்டும். அதற்கு முன்னர், அப்போதும் தாமே ஜனாதிபதி என்று கருதி, அதற்கேற்ப ஏற்பாடுகளை ரணில் விக்கிரமசிங்க இப்போதே செய்து வைப்பது என்பது கொஞ்சம் அதிகப் பிரசிங்கித்தனமான வேலைதான்.

அடுத்தது – சட்டமா அதிபர் பதவியில் இருந்தால்தான் சஞ்சய் ராஜரத்தினத்தைப் பிரதம நீதியரசராக நியமிக்க முடியும் என்பது அபத்தக் கருத்தாகும். சட்டமாக அதிபராக இருப்பவரை பிரதம நீதியரசராக நியமிக்கும் முன்னுதாரணங்கள் இருந்தாலும் அது கட்டாயமானது அல்ல.

முன்னர் நீதித்துறையில் நீதிவானாகக் கூட பதவி வகிக்காத – சட்டமா அதிபர் திணைக்களத்தில் பணியாற்றாத – வெளியில் சிரேஷ்ட சட்டத்தரணியாக பணியாற்றும் ஒருவரைக் கூடப் பிரதம நீதியரசராக நியமிக்க முடியும்.

தான் எதிர்க்கட்சியில் இருந்த சமயம் தமக்காக வாதாடி வந்த சிரேஷ்ட சட்டத்தரணி நெவில் சமரக்கோனை தாம் ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் பிரதம நீதியரசராக நியமித்தார் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா.

ஜே ஆருக்குக் கூட இசைவில்லாத – தன்னிகரில்லா மதிப்பு வாய்ந்த – பிரதம நீதியரசராக இப்போதும் இலங்கையின் சட்ட சரித்திரத்தில் மதிக்கப்படுகின்றார் நெவில் சமரக்கோன்.

எனவே சட்டமா அதிபர் பதவியினின்றும் ஓய்வு பெற்றிருக்கும் சஞ்சய் ராஜரத்தினத்தைத் தற்போதைய பிரதம நீதியரசர் ஓய்வு பெறும்போதோ அல்லது முன்னரோ, பின்னரோ நாட்டின் உயர் நீதிமன்ற நீதியரசராகவோ அல்லது பிரதம நீதியரசராகவோ அச்சமயத்தில் பதவியில் இருக்கக்கூடிய ஜனாதிபதியும் அரசமைப்புக் கவுன்ஸிலும் இணைந்து – இயைந்து – நியமிக்க முடியும்.

அதற்கேற்ற வகையில் தமது பெயரை மண்ணாக்காமல் சேவையிலிருந்து இப்போது ஓய்வு பெற்றிருக்கின்றார் சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம்.

அவரது இடத்துக்கு புதிய சட்டமா அதிபராக சட்டமா அதிபர் திணைக்களத்தில் சொலிஸிட்டர் ஜெனரலாகவும் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரலாகவும் சிரேஷ்ட நிலையில் இருக்கும் இருவரின் பெயர்கள் அடிபட்டாலும், அந்தத் திணைக்களத்தில் வேறு எவரையோ அல்லது திணைக்களத்துக்கு வெளியில் சட்டத்தரணியாகப் பணியாற்றும் வேறு எவரையோ கூட அந்தப் பதவிக்கு ஜனாதிபதி பரிந்துரைக்க முடியும் என்பதை மறுப்பதற்கில்லை.

பின்னர் சர்ச்சைக்குரியவராக மாறிய பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் ஆரம்பத்தில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் பணியாற்றிய பின்னர் வெளியேறி, தனிப்பட்ட சட்டத்தரணியாகப் பணியாற்றிய போது தான் திடீரென சட்டமா அதிபராக நியமிக்கப்பட்டார். அந்தப் பதவியில் இருந்து சர்ச்சைக்குரிய விதத்தில் அவர் பிரதம நீதியரசர் பதவிக்கு உயர்த்தப்பட்டார்.

நீதிமன்றங்களுக்கு பிரசன்னமாகாமல் வெளியில் சட்ட ஆலோசகராகப் பணியாற்றி வந்த ஷிராணி பண்டாரநாயக்காவை உயர்நீதிமன்ற நீதியரசராக நேரடியாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியமித்த போது அது கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியது என்பதும் –

அதே ஷிராணி பண்டாரநாயக்கா தான் துணிச்சலான பிரதம நீதியரசராகச் செயல்பட்டமைக்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிப் பீடத்தினால் குறுக்கு வழியில் அச்சுறுத்திப் பதவியிலிருந்து துரத்தப்பட்டார் என்பதும் –

அந்த இடத்துக்கு அச்சமயம் சட்டமா அதிபராக பணியாற்றிய மொஹான் பீரிஸ் புதிய பிரதம நீதியரசராக மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டார் என்பதும்– நினைவு கூரத் தக்கவை.

## இரணைமடுக் குளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் நீராடச் சென்றபோதே நீரில் மூழ்கிக் காணாமல்போயுள்ளார்.

திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் தரம் 9 இல் கல்வி கற்று வரும் முறிகண்டி – வசந்தநகர் பகுதியில் வசிக்கும் செல்வரத்தினம் ருஷாந்தன் எனும் சிறுவனே இவ்வாறு காணாமல்போயுள்ளார்.

அந்தச் சிறுவனைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ரணிலுக்கு ஆதரவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வீரதுங்க தெரிவித்தார்.

இலத்திரனியல் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தம்மால் இயக்கக்கூடிய நபர் ஒருவர் ஜனாதிபதியாக இருக்க வேண்டும் என இந்தியா கருதுகின்றது. பொது வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க களமிறங்க ஆதரவு வழங்குமாறு பஸில் ராஜபக்ஷவுக்கு அந்நாடு அழுத்தம் கொடுத்து வருகின்றது. டில்லியால் என்ன கூறப்பட்டாலும் அவற்றை கேட்பார், ஆனால் பொருத்தமான நேரத்தில் உரிய வகையிலேயே பஸில் ராஜபக்ஷ முடிவுகளை எடுப்பார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவைப் பெறுவதற்கு இருந்த இறுதி வாய்ப்பையும் ரணில் விக்கிரமசிங்க தவறவிட்டு விட்டார். ராஜபக்ஷக்களின் பொறுமை எல்லை தாண்டிவிட்டது. ரணிலை ஆதரித்தால் கட்சியைவிட்டு வெளியேறி, புதிய கட்சியை ஆரம்பிப்பேன் என நாமல் ராஜபக்ஷகூட கூறிவிட்டார். எனவே, ஜனாதிபதித் தேர்தலில் மொட்டுக் கட்சி வேட்பாளர் களமிறங்குவது உறுதி. அந்த வேட்பாளர் தம்மிக்க பெரேரா என்பதும் உறுதி.

சிலர் ராஜபக்ஷக்கள் வேண்டாம் என்கின்றனர். முதுகெலும்பிருந்தால் – முடிந்தால் ரணில் விக்கிரமசிங்க யானை சின்னத்தில் வந்து போட்டியிட்டு காட்டட்டும்." – என்றார் வீரதுங்க.

## மிகவும் பயங்கரமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

"எனது வீட்டின் முன்பாக ஆயுதங்களுடன் இனந்தெரியாத நபர்கள் நடமாடியமை தொடர்பாக நாளை சபாநாயகருக்கும் எழுத்து மூலம் வழங்கி உரிய தரப்புக்களுக்கும் விரைவில் தெரியப்படுத்துவேன்." – என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் இல்லத்தின் முன்பாக இனந்தெரியாத நபர்களின் அச்சுறுத்தும் வகையிலான நடமாட்டம் அவதானிக்கப்படமை தொடர்பாகக் கொடிகாமத்தில் நேற்று ஊடகங்களின் கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அருகில் உள்ள எனது இல்லத்தின் முன்பாக 4 மோட்டார் சைக்கிள்களில் 9 பேர் இனந்தெரியாத வகையில் முகத்தையும் மோட்டார் சைக்கிள் இலக்கத்தகட்டையும் கறுப்புத் துணிகளால் மறைத்து வாள்களைச் சுழற்றியவாறு வீதியால் செல்வது எனது வீட்டு கண்காணிப்பு கமராவின் மூலம் அவதானிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் நடக்கும் பல குற்றச் செயல்களுக்குப் பின்னால் இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிஸார், உளவுப்பிரிவு பின்னணியில் இருப்பது மிகத் துலாம்பரமாக வெளிப்படுத்துகின்றது.

போர்க் காலத்தில் இராணுவத்தினரும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் ஃபீல்ட் பைக்கில் கறுப்புத் துணிகளைக் கட்டியவாறு வந்து துப்பாக்கிச்சூட்டில் ஈடுபட்டனர்.

அதே பாணியில் உள்ளூர் மோட்டார் சைக்கிளைப் பயன்படுத்தி ஏன் இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிஸார், உளவுப்பிரிவு செய்யக்கூடாது என்ற சந்தேகம் எமக்கு இருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள இளைஞர்கள் செய்வதாகவும் குழுக்கள் செய்வதாகவும் காட்டிக்கொண்டு அவர்களைக் கைது செய்யாமலும் நடவடிக்கை எடுக்காமலும் விட்டு யாழ்ப்பாணத்தை அச்ச சூழலுக்குள் வைத்திருக்க முற்படுகின்றனர். இதற்குப் பின்னணியில் அரச புலனாய்வுப் பிரிவு இருப்பது மிகத் துலாம்பரமாகத் தெரிகின்றது.

யாழ்ப்பாணம் தற்போது மிகப் பயங்கரமான சூழலில் இருக்கின்றது என்பதை மிகத் தெளிவாகச் சொல்லிவைக்க விரும்புகின்றேன்.

எனது வீட்டின் முன்பாக ஆயுதங்களுடன் நடமாடியமை தொடர்பாக நாளை மறுதினம் (நாளை) சபாநாயகருக்கு எழுத்துமூலம் வழங்கி உரிய தரப்புக்களுக்கும் விரைவில் தெரியப்படுத்துவேன்.

இதற்கு உரிய நடவடிக்கையை எடுக்க அரசு தயங்கினால் யாழ்ப்பாணம் இன்னமும் மோசமான நிலைக்குச் செல்லும்." – என்றார்.




# வரியை அதிகரிப்பது தீர்வாக அமையாது!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

“வரி அதிகரிப்பு ஒருபோதும் பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வாக அமையாது.” – இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ் 271 ஆவது கட்டமாக 1,200,000 ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை, கம்பஹா மாவட்ட பாடசாலைகளுக்கு வழங்கி வைக்கும் நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் செய்து கொண்ட இணக்கப்பாடுகளின் பிரகாரம் 2028ஆம் ஆண்டு முதல் நாம் மீண்டும் கடனைச் செலுத்த வேண்டும்.

2033ஆம் ஆண்டு முதல் செலுத்த முடியுமாக இருந்த கடனை 2028ஆம் ஆண்டிலிருந்தே செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டமை அரசாங்கத்தின் இயலாமையினாலாகும்.

வருங்காலக் கடன்களைச் செலுத்துவதற்கான அரசாங்கத்தின் பதில் வரிகளை அதிகரித்து பொதுமக்களின் பணத்தைச் சுரண்டுவதாகவே உள்ளது. நாட்டின் பிரச்சினைகளை இவ்வாறு தீர்க்க முடியாது.

நாட்டில் ஏற்றுமதிச் சார்ந்த பொருளாதாரத்தை உருவாக்கவும் நாட்டின் பொருளாதார இயக்கிகளான சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறையினரை ஊக்கப்படுத்தவும், அவர்களின் தொழில்களை வலுப்படுத்தவும், மேம்படுத்தவும் அரசாங்கம் தலையீடு செய்ய வேண்டும். பொருளாதார விரிவாக்கத்தைத் தவிர வேறு தீர்வு நாட்டில் இல்லை.

எனினும் வரிக்கு மேல் வரியை மக்களின் தோள்களில் சுமத்தும் சூத்திரத்தை அரசாங்கம் தொடர்ந்தும் அமுல்படுத்தி வருகின்றது.”– என்றார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## குற்றக்கூண்டில் நீதித்துறை

இலங்கையின் நீதித்துறைக்கு எதிராக மோசமான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் அவை பற்றி விரிவாக ஆராய்வதற்காக நாட்டின் சகல மாவட்ட நீதிபதிகள் மற்றும் நீதிவான்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்டமைப்பான நீதிச் சேவைகள் சங்கம் இன்று ஞாயிற்றுக்கிழமை தனது விசேட பொதுக்குழுக் கூட்டம் ஒன்றை கூட்டி இருப்பதாகத் தெரிகின்றது.

நீதித்துறை முடிவுகள், தீர்ப்புகள், உத்தரவுகள் தொடர்பில் அபகீர்த்தியை - அவதூறை - ஏற்படுத்தும் அறிவிப்புக்கள், அறிக்கைகள், பேச்சுகள் வெளியாகி வரும் நிலையில், அவை குறித்து ஆராய்வதற்காகவே இன்று நீதிச்சேவைகள் சங்கத்தின் விசேட பொதுக் குழுக் கூட்டம் கொழும்பில் இடம்பெறுவதாகக் கூறப்படுகின்றது.

நாட்டின் நீதி அமைச்சரான ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ மாவட்ட நீதிமன்றங்களின் தீர்ப்புகள், உத்தரவுகள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் கிழி கிழி எனக் கிழித்துப் பிய்த்துப் பிரித்து உதறி விமர்சனம் செய்துள்ள நிலையில், நீதிபதிகள், நீதிவான்கள் மட்டத்தில் அந்த நடவடிக்கை பலத்த அதிருப்தியையும் விசனத்தையும் ஏற்படுத்தி இருப்பதாகக் கூறப்படுகின்றது.

நாடாளுமன்ற உரைகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விசேட சிறப்புரிமைகள் இருக்கின்றன. அவற்றைக் காப்பரணாக - தமக்குப் பாதுகாப்பாக - வைத்துக் கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நீதித்துறையை மோசமாக விமர்சித்து வருகின்றனர் என்று குறை கூறப்படுகின்றது.

அது உண்மைதான். மறுப்பதற்கு இல்லை. அப்படி நடக்கின்றது.

ஆயினும், வேறு சில விடயங்களும் இங்கு கவனிக்கப்பட வேண்டும்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதற்கு பாதுகாப்பும் சிறப்புரிமைகளும் இருக்கின்றன என்பதற்காக நீதிமன்றங்கள், நீதிபதிகள், தீர்ப்புகள் உட்பட்ட எத்தரப்பையும் அல்லது யாரையும், எத்தகைய தவறான போக்கிலும், அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையிலும், விமர்சிக்கவோ பகிரங்கமாகக் குறை கூறவோ கூடாது என்பது எவ்வளவு தூரம் நியாயமோ -

அந்த அளவுக்கு, நீதிமன்ற உத்தரவுகள், தீர்ப்புகள், நடவடிக்கைகள், செயற்பாடுகள் பகிரங்க விவாதத்துக்கோ விமர்சனத்துக்கோ உட்படுத்தப்படக்கூடாது என்று நீதித்துறையினருக்கு இருக்கும் விசேட உரித்தை வைத்துக் கொண்டு, நீதிமன்றங்களும் தம்மிஷ்டபடி, கண்மூடித்தனமாக, நியாயப்படுத்த முடியாத வகையில் செயல்பட முயற்சிக்கக் கூடாது என்பதும் நியாயமாகும்.

'நீதி நிலைநாட்டப்படுவது மாத்திரமன்றி நிலை நாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும்.'

நாட்டின் தலை போகின்ற விடயங்களில் நீதித்துறை விரைவு முன்னுரிமை கொடுத்து விசாரணைகளை நடத்தி முடிப்பதில்லை, வேண்டுமென்றே இழுத்தடிக்கின்றது என்ற குற்றச்சாட்டு - கருத்தியல் - மக்கள் மத்தியில் பரவலாக உண்டு.

அரசமைப்புக்கு முரணாக - அரசமைப்புக்கு கவுன்ஸிலின் முடிவுக்கு தவறான அர்த்தப்படுத்தல் கொடுத்து - நாட்டின் பொலிஸ்மா அதிபர் முறையற்ற விதத்தில் நியமிக்கப்பட்டிருக்கின்றார் என்பது நாட்டு மக்கள் அனைவருக்கும் தெரிந்த விடயம். வழமையான நீதித்துறை நடவடிக்கை மூலம், நீதிமன்றம் இவ்விடயத்தில் நீதியைத் தேடிக் கண்டுபிடிக்கும் போது சம்பந்தப்பட்ட பொலிஸ் மா அதிபர் தமது பதவிக்காலம் முடித்து ஓய்வில் சென்றிருப்பார் என்பது துலாம்பரமானது.

இத்தகைய விடயங்களில் 'தாமதித்த நீதி மறுக்கப்பட்ட நீதியாகிவிடும்' என்ற உண்மையை முன்னிறுத்தி, விரைந்து காரியமாற்றுவதற்கு வக்கற்றவையாக இலங்கை நீதிமன்றங்களும் சட்டங்களும் இருக்கின்றன.

ஆனால், மறுபுறத்தில் அரசியல் வழக்குகளில் மனுத்தாக்கலாகி அடுத்த தடவையிலேயே இடைக்காலத் தடை உத்தரவுகள் தாராளமாகப் பறக்கின்றன.

இத்தகைய போக்குகள், நீதி அமைச்சர் போன்றோர் நாடாளுமன்றத்தில் நீதித்துறைக்கு எதிராக முன்வைக்கும் குற்றச்சாட்டுகளில் உண்மை இருக்கலாம் என்ற மனப்பதிவையே மக்கள் மத்தியில் தந்து நிற்பதும் மறுப்பதற்கில்லை.

நீதித்துறையின் தவறுகளை விரைந்து சுட்டிக்காட்டி, சிக்கலின்றி நிவாரணம் பெறும் யதார்த்தமான வழிமுறை ஒன்று - பொறிமுறை ஒன்று - செயற்பாட்டில் இல்லாதவரை, பகிரங்கமாக இயலாவிட்டாலும் தனி மனிதர்களின் திட்டல்களுக்கும் தூற்றுதல்களுக்கும் இலங்கை நீதித்துறை இலக்காவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

# டில்லியில் கட்டுமானப் பணியிடத்தில் விபத்து: 3 தொழிலாளிகளின் சடலங்கள் மீட்கப்பட்டன





டில்லியில் பெய்த கனமழை காரணமாக வசந்த் விஹார் பகுதியில் கட்டுமானப்பணியிடத்தில் சுவர் இடிந்து விழுந்த விபத்தில் சிக்கிய மூன்று தொழிலாளர்களின் உடல்கள் மீட்கப்பட்டன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்காரணமாக டில்லியில் மழை தொடர்பான சம்பவங்களால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 8 ஆக அதிகரித்துள்ளது.

டில்லியில் வசந்த் விஹார் பகுதியில் கட்டுமானப் பணியிடத்தில் மண் சரிந்து விபத்து ஏற்பட்டதாக டில்லி தீயணைப்புத் துறையினருக்கு அதிகாலை 5.30 மணியளவில் தகவல் கிடைத்தது. இதுகுறித்து தீயணைப்புத் துறை அதிகாரிகள் கூறும்போது,

"கட்டுமானப் பணியிடத்தில் நடந்த விபத்தில் சிக்கிய மூன்று தொழிலாளர்களின் உடல்கள் சடலமாக மீட்கப்பட்டுள்ளன. இறந்தவர்களில் இருவர் சந்தோஷ் குமார் யாதவர் (வயது 19) மற்றும் சந்தோஷ் (வயது 38) என்பது தெரியவந்துள்ளது. மூன்றாமவர் யார் என இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

இடிபாடுகளை அகற்ற கிரேன்கள் பயன்படுத்தப்பட்டன. கட்டுமான குழிகளில் இருந்த மழைநீரை அகற்ற மோட்டார் பம்புகள் பயன்படுத்தப்பட்டு உடல்கள் மீட்கப்பட்டன. மீட்கப்பட்ட தொழிலாளர்களின் உடல்கள் சப்தர்ஜங் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இடிபாடுகளில் இன்னும் யாரவது சிக்கியிருக்கிறார்களா என்று அறிய தேடும் பணிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன. தேசிய பேரிடர் மீட்புப் படையினர், தீயணைப்புத் துறையினர், பொலிஸ் அதிகாரிகள் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்" என்று தெரிவித்தனர்.

இவை தவிர, பருவ மழைத் தொடங்கி உள்ள டில்லியில் கடந்த 88 ஆண்டுகளுக்கு இல்லாத அளவுக்கு ஒரே நாளில் ஜூன் மாதத்தில் அதிக மழை பொழிந்த நிலையில் மழைத் தொடர்பான விபத்துக்களில் மேலும் 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் டில்லி விமான நிலையத்தின் டெர்மினல் 1 மேற்கூரை இடிந்து விழுந்து கார் ஓட்டுநர், ரோகினி பிரேம் நகர் பகுதியில் மின்சாரம் பாய்ந்து 39 வயது ஆண் ஒருவர், நியூ உஸ்மான்பூர் மற்றும் ஷாலிமார் பாக் பகுதிகளில் தண்ணீரில் மூழ்கி 3 பேர் அடங்குவர்.

கடந்த வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி வரை டில்லியில் 228 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கடந்த 1936 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஜூன் மாதத்தில் இந்தளவுக்கு மழை பெய்துள்ளது.

# தமிழகத்தில் மதுவிலக்கு சாத்தியமில்லை எனில் அரசு பதவி விலக வேண்டும்; அன்புமணி காட்டம்

"புளித்துப் போன காரணங்களைக் கூறியே மதுவிலக்கை தள்ளிப்போடக் கூடாது. மதுக்கடைகள் இருக்கும்போதே மாநிலம் முழுவதும் கள்ளச் சாராயம் ஆறாக ஓடிக் கொண்டு தான் இருக்கிறது. மது விலக்கு சாத்தியமில்லை என்றால் அரசு பதவி விலக வேண்டும்."

– இவ்வாறு பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"தமிழகத்தில் முழு மதுவிலக்கை கொண்டு வருவதற்கான சூழல் இல்லை. தமிழகத்தில் மதுவிலக்கை நடைமுறைப் படுத்தினால், அண்டை மாநிலங்களிலிருந்து மது உள்ளே வருவதற்கும் வாய்ப்பு இருக்கிறது' என்று மதுவிலக்குத் துறை அமைச்சர் முத்துசாமியும், 'உழைப்பவர்களின் அசதியை போக்க அவர்களுக்கு மது தேவை. டாஸ்மாக் மதுவில் கிக் இல்லாததால் கள்ளச் சாராயத்தை நோக்கி செல்கின்றனர் என்று நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகனும் கூறியிருக்கின்றனர். அமைச்சர்களின் கருத்துகள் மிகவும் அதிர்ச்சியளிக்கின்றன. தமிழக அரசின் தோல்வியையும், இயலாமையையுமே அமைச்சரின் கருத்துகள் காட்டுகின்றன.

தமிழக சட்டப்பேரவையில் இன்று நடைபெற்ற விவாதத்தின்போது குறுக்கிட்டு பேசிய அமைச்சர் முத்துசாமி, 'தமிழகத்தில் மதுவிலக்கை நடைமுறைப்படுத்துவதற்கான சூழல் இல்லை' என்று கூறியிருக்கிறார். அதன் பொருள் என்னவென்று தெரியவில்லை. மதுவிலக்கை நடைமுறைப் படுத்த எந்தச் சூழலும் தேவையில்லை. நாட்டு மக்கள் அனைவரும் நலமாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் போதுமானது.

அந்த எண்ணம் இருந்தால் ஒரே ஆணையில் மதுவிலக்கை அறிவித்து, நாளை முதல் மதுவிலக்கை நடைமுறைப்படுத்த முடியும். ஆனால், மது ஆலை அதிபர்களின் ஆதரவைப் பெற்ற தி.மு.க. அரசுக்கு அந்த எண்ணம் இல்லை என்று தோன்றுகிறது.

தமிழகத்தில் மதுக்கடைகளை மூடினால் அண்டை மாநிலங்களில் இருந்து மது உள்ளே வந்து விடும் கள்ளச்சாராயம் பெருகிவிடும் என்ற புளித்துப் போன காரணங்களைக் கூறியே மதுவிலக்கை தள்ளிப்போடக் கூடாது. தமிழத்தில் சுமார் 5,000 மதுக்கடைகள் இருக்கும்போதே மாநிலம் முழுவதும் கள்ளச் சாராயம் ஆறாக ஓடிக்கொண்டு தான் இருக்கிறது. இது அரசின் தோல்வியே தவிர, இதற்கு வேறு



காரணங்கள் இல்லை. அண்டை மாநிலங்களில் மதுக் கடைகள் இருந்தாலும் அங்கிருந்து தமிழகத்துக்குள் மது வராமல் தடுக்க வேண்டியதும், கள்ளச் சாராய வணிகத்தை தடுக்க வேண்டியதும் அரசின் அடிப்படைக் கடமைகள். அதற்காகத் தான் காவல் துறை என்ற அமைப்பும், அதில் மதுவிலக்குப் பிரிவு என்ற துணை அமைப்பும் உள்ளன.

தமிழகத்தின் எந்த மூலை முடுக்கில் கள்ளச் சாராயம் விற்கப்பட்டாலும் அது குறித்து அடுத்த 5 நிமிடங்களுக்குள் அரசுக்கு தகவல் கிடைக்கும் வகையில் காவலர்கள், கிராம உதவியாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் என வலிமையான கட்டமைப்பு அரசிடம் உள்ளது. இவ்வளவையும் வைத்துக் கொண்டு அண்டை மாநிலங்களில் இருந்து மது வருவதையும், கள்ளச் சாராயத்தையும் தடுக்க முடியாவிட்டால் அது அரசின் இயலாமைதான். மதுவிலக்கு சாத்தியமில்லை என்றால் அரசு பதவி விலக வேண்டும்.

அரசு அதன் வருவாய்க்காகவும், ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் நடத்தும் மது ஆலைகள் செழிக்க வேண்டும் என்பதற்காகவும் மதுக்கடைகளை தெருவுக்குத் தெரு திறந்து விட்டு, உழைப்பவர்களின் அசதியைப் போக்க அவர்களுக்கு மது தேவை என்று உழைக்கும் மக்களின் மீது பழியை சுமத்துவது கண்டிக்கத்தக்கது. அதிலும் துரைமுருகன் போன்ற மூத்த அமைச்சர்களே சற்றும் சமூகப் பொறுப்பு இல்லாமல் இப்படி பேசுவது நியாயமல்ல. மதுவால் தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் 2 லட்சம் பேர் உயிரிழப்பதை விட சிறிது நேரம் அசதியாக இருப்பது எவ்வளவோ மேல். எனவே, தமிழகத்தில் உடனடியாக மதுவிலக்கை நடைமுறைப்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்."– என்று குறிப்பிட்டுள்ளார்.



# செங்கடலில் சென்ற கப்பல் மீது தாக்குதல்

யேமன் கடற்கரை அருகே செங்கடலில் சென்ற கப்பல் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஏமனில் உள்ள அல் ஹுதாயா துறைமுகத்திற்கு வட கிழக்கில் சுமார் 150 கடல் மைல்கள் (277 கி.மீ.) தொலைவில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கப்பலுக்கு மிக அருகில் 5 ஏவுகணைகள் ஏவப்பட்டதாகவும், இந்த தாக்குதலில் கப்பலுக்கு சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல் குறித்து இங்கிலாந்து கடல்சார் வணிக கட்டுப்பாட்டு மையத்திற்கு உடனடியாக தகவல் தெரிவிக்கப்பட்ட நிலையில், இங்கிலாந்து கடற்படையினர் இது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும் செங்கடல் வழியே பயணிக்கும் கப்பல்கள் மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டும் எனவும் ஏதேனும் சந்தேகத்திற்குரிய கப்பல்கள் தென்பட்டால் உடனடியாக தகவல் தெரிவிக்குமாறும் இங்கிலாந்து கடற்படை அறிவுறுத்தியுள்ளது.

யேமன் நாட்டில் இயங்கி வரும் ஹவுதி அமைப்பினர், காசா முனையில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலை கண்டித்து கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முதல் செங்கடலில் பயணிக்கும் இஸ்ரேலுக்கு சொந்தமான கப்பல்கள் மீது தாக்குதல் நடத்த தொடங்கினர்.

இந்த தாக்குதலுக்கு பதிலடியாக அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகள் ஒன்றிணைந்து ஏமனில் உள்ள ஹவுதி இலக்குகள் மீது வான்வழி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.



# உலகின் மிகப்பெரிய கடற்படை இராணுவப் பயிற்சி ஆரம்பம்

உலகின் மிகப்பெரிய கடற்படை இராணுவப் பயிற்சியாகக் கருதப்படும் ரிம் ஆஃப் தி பசுபிக் இராணுவப் பயிற்சி நேற்று முன்தினம் ஆரம்பமானது.

ரிம் ஆஃப் தி பசுபிக் கடற்படைப் பயிற்சியில் 29 நாடுகளைச் சேர்ந்த 25 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்கவுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த இராணுவ பயிற்சி ஓகஸ்ட் மாதம் வரை ஒரு மாதத்திற்கும் மேலாக நடைபெறும் என கூறப்படுகிறது.

இதேவேளை, தென் கொரியா, ஜப்பான், இந்தியா, கிழக்கு ஆசிய நாடுகள், தெற்காசிய நாடுகள், லத்தீன் அமெரிக்க நாடுகள் மற்றும் பல ஐரோப்பிய நாடுகளும் இந்த கடற்படை போர் பயிற்சியில் பங்கேற்கின்றன.



# அமெரிக்காவின் பல பகுதிகளில் புதிய கொவிட் 19 தொற்று பரவல்

அமெரிக்காவின் பல பகுதிகளில் புதிய கொவிட் 19 தொற்று பரவி வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில், சுமார் 39 மாநிலங்களில் கொவிட் 19 தொற்றின் புதிய அலை பரவி வருவதாக அமெரிக்காவின் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்கள் கூறுகின்றன.

இருப்பினும், நோய் தொற்று ஒப்பீட்டளவில் குறைவாக இருந்தாலும், மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவோர் மற்றும் இறப்புகளன் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகக் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, 2020 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் கொவிட் 19 தொற்று முதன்முதலில் பரவியதில் இருந்து கடந்த மாதம் கொவிட் 19 இறப்புகள் மற்றும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மிகக் குறைந்த நிலையில் இருந்தது.

இருப்பினும், தற்போது புதிய கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை பதிவாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# நேபாளத்தில் நிலச்சரிவு காரணமாக 9 பேர் பலி

நேபாளத்தில் பருவபெயர்ச்சி கனமழை காரணமாக பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

நிலச்சரிவு, மின்னல் தாக்கம் என மக்கள் பல இயற்கை இன்னல்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், கனமழை மற்றும் நிலச்சரிவுகளில் சிக்கி 3 குழந்தைகள் உட்பட 9 பேர் பலியாகி உள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது. மேலும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் நிலச்சரிவில் பலியானது அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கனமழையால் ஏற்படும் நிலச்சரிவுகளால் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை மற்றும் சுற்றுச்சூழலுக்கு பெரிய அளவில் பாதிப்பு ஏற்படுகிறது.

நேபாளத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 9 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் பல லட்சம் பேர் பருவகாலத்தின் போது ஏற்படும் மழை தொடர்பான அனர்த்தங்களால் பாதிக்கப்படுகின்றனர் என தேசிய இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.











# கந்தானை சென். செபஸ்தியன் தேவாலயத்தின் அபிவிருத்திப் பணிகளை ஜனாதிபதி ஆராய்ந்தார்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று பிற்பகல் கந்தானை சென். செபஸ்தியன் தேவாலயத்திற்குச் சென்று அதன் அபிவிருத்தொ பணிகள் குறித்த நேரில் ஆராய்ந்தார்.

கந்தானை சென். செபஸ்தியன் தேவாலயம் பெருமளவான கிறிஸ்தவ மக்கள் வரும் தலமாகக் காணப்படுவதோடு, இதன் திருவிழா காலத்தில் நாடளாவிய ரீதியில் லட்சக்கணக்கிலான மக்கள் வருகை தருவர்.

தேவாலயத்தின் சுற்று வட்டாரத்தில் நிறையும் தண்ணீரை அருகிலுள்ள வயலுக்கு அனுப்புவதற்கான திட்டம் குறித்த கோரிக்கைகள் நீண்ட நாள்களாக முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில், அதற்காக 6 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதன் முதற்கட்ட ஏற்பாடுகளை ஆரம்பிப்பதற்காக 02 லட்சம் ரூபா காசோலையை ஜனாதிபதி தேவாலயத்தின் தலைமைப் பாதிரியார் லலித் எக்ஸ்பெடிடஸிடம் வழங்கி வைத்தார்.

அதேபோல், தேவாலயத்திலிருந்து நீர்கொழும்பு வரையிலான பாதை மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதால், அதனை மறுசீரமைத்துத் தருமாறு நீண்ட காலம் விடுக்கப்பட்ட கோரிக்கையெள ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி அவ்விடத்திலேயே போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தனவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு வீதியை விரைவில் மறுசீரமைத்து கொடுக்குமாறு பணிப்புரை விடுத்தார்.

அதேபோல், நீர்க்கொழும்பு வலய கிறிஸ்தவ பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகள் குறித்து பாதிரியார்களிடம் கேட்டறிந்துகொண்ட ஜனாதிபதி, கிறிஸ்தவ பாடசாலைகளின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காண்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியிருப்பதாகவும் தெரிவித்தார்.

அதனையடுத்த சென். செபஸ்தியன் தேவாலயத்திற்கு வருகை தந்திருந்த மக்களோடும் ஜனாதிபதி சிநேகபூர்வமாக கலந்துரையாடினார்.

இந்த நிகழ்வில், கிறிஸ்தவ பாடசாலையின் முன்னாள் பொறுப்பதிகாரி அயிவன் பெரேரா உள்ளிட்ட பாதிரியார்களும் முன்னாள் அமைச்சர் ஜோன் அமரதுங்கவும் கலந்து கொண்டிருந்தனர்.











# அரசியல் கூட்டுக்குள் சங்கமம் ஆகினார்கள் சிவில் பிரமுகர்கள்!





வி.எஸ்.சிவகரன்

வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ்ப்பொது வேட்பாளர் எனும் உரையாடல் யாராலோ தொடங்கப்பட்டு எங்கோ போய் நிற்கிறது . இனி என்ன வடிவமெடுக்குமோ என்பதை யார் அறிவார்...?

கடந்த 70 ஆண்டுகளாக பல சக்கடத்தார்கள் பதம் பார்த்து விழுந்த வரலாறுகள் உண்டு. அதில் புலிகள் மட்டும் விதி விலக்கு. 2009க்குப் பின்னர் பல்வேறு விதமான குழப்பங்களும் முதிர்ச்சியற்ற அரசியல் செயல்பாடுகளும் அரங்கேறுகின்றன. எதுவும் நின்று, நிதானிக்கக் கூடியதாகத் தோன்றவில்லை. அதற்கு அடிப்படைக் காரணம் வலிமையான – நம்பகத்தன்மையான – தலைமைத்துவம் இன்மையே. அந்த அரசியல் வெற்றிடத்தைப் பயன்படுத்திப் பலர் பகல் கனவு காண்கின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வயோதிப முடக்கத்தால் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக தமிழர் அரசியலில் – அதிலும் தேர்தல் அரசியலில் – வெற்றிடத்தையே ஏற்படுத்தியிருக்கின்றார். அதைத் தொடர்ந்து அண்மையில் நடைபெற்ற தமிழரசு கட்சியின் உள்ளகத் தேர்தல் விடயமும், நீதிமன்ற விவகாரமும் மேலும் தமிழர் அரசியலை பலவீனப்படுத்துவன்வாகவே அமைந்திருக்கின்றன. இதை யதார்த்தமாகவோ, அறிவு பூர்வமாகவோ புரிந்து கொண்டு தமிழ் மக்களின் எதிர்கால இருப்பை வலிமையாக நிர்ணயிக்கும் அடிப்படைக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு முனைந்திருக்க வேண்டும். தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒருங்கிணைத்திருக்க வேண்டும். இல்லையேல் வல்லாளர்கள் ஒன்று சேர்ந்து புதிய கட்சியை வெளிப்படை தன்மையோடு உருவாக்கி இருக்க வேண்டும்.

இவற்றையெல்லாம் செய்யவில்லை. தமிழர்களின் தற்போதைய பாரிய பிரச்சினையாகிய காணிப் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஒரு சட்டப் பொறிமுறையை உருவாக்கி இருக்கலாம். அல்லது தமிழர்களை ஒரு தேசமாக திரளக் கூடிய ஒரு செயல்பாட்டு அமைப்பை உருவாக்கி இருக்கலாம். இதில் எதையும் முன்னெடுக்காமல் – கள நிலைவரத்தைப் புரிந்து கொள்ளாமல் – செவ்வாய்க் கிரகத்திலிருந்து வந்தவர்கள் போல் தற்போது நடைமுறை சாத்தியமற்ற வேலையில் மூர்க்கத்தனமாக முனைப்பு காட்டி வருகிறார்கள். மூலோபாய சித்தாந்தத்தினைக் கட்டமைப்பதில் எவ்வாறான உயரிய நிலையியல் கரிசனை கொள்ள வேண்டும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பொறுப்பேற்றல், பொறுப்புக் கூறுதல், அதை பகிர்ந்து நம்பகத்தை ஏற்படுத்துதல் – இவற்றில் பாரிய பொறுப்புடைமை பாத்திரம் வகித்தல் அவசியம்.

அதைச் செய்வார்களா இந்த சிவில் பிரமுகர்கள்? இதில் உள்ள கட்சிகள் கடந்த 15 ஆண்டுகளில் தமிழ் மக்களின் உரிமை சார்ந்து எத்தனை போராட்டம் நடத்தினார்கள்? எத்தனை மக்கள் சந்திப்புக்களை ஏற்படுத்தி உள்ளார்கள்? அல்லது சிவில் சமூகம் எனக் கூறுபவர்கள் அல்லது இவர்களிடம் உள்ள அமைப்புக்கள் எத்தனை ஜனநாயக போராட்டங்களை நடத்தின? இதில் முன் நிற்கும் சிவில் பிரமுகர்கள் இந்த விடயங்களை முன்னெடுத்தார்களா? அல்லது ஓர் செயலூக்கமுள்ள அமைப்பில் கூட அங்கத்தவர்களாக உள்ளார்களா? இருந்திருந்தால் கடந்த காலத்தில் பல போராட்டங்களை முன்னெடுத்து அனுபவசாலிகளாக மிளிர்ந்திருப்பார்கள். இதில் தமிழ் தேசிய பசுமை இயக்கம் மாத்திரம் யாழில் சில விடயங்களை முன்னெடுத்திருந்தது. இதில் "லெட்டர் பேட்" கட்சிகளே அதிகம். அதிலும் ரெலோ, புளோட், ஜனநாயக போராளிகள் கட்சி இந்த மூன்றும் இறுதிவரை களத்திற்கு வருவார்களா என்பதில் வாய்ப்பு மிகவும் குறைவு. யாரோ ஒரு தென்னிலங்கை வேட்பாளரை ஆதரிக்கும் நிலை தோன்றலாம். விக்னேஸ்வரன், சுரேஷ் பிரேமச்சந்திரன் இருவருக்கும் இடையிலே எந்தக் கட்சியிலே பொது வேட்பாளரை நிறுத்துவது என்பதிலே முரண்பாடு தோன்றலாம்.

அது, இலகுவில் தீர்க்கக் கூடிய விடயமாக முடியப் போவதில்லை. ஏனெனில் அந்தச் சின்னம் பிரபலமாகினால் அடுத்து வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு உபயோகமாக அமையும் என இரண்டு தரப்பினரும் முனைப்புக் காட்டலாம். அதில் விடாக்கண்டன் கொடாக்கண்டன் நிலையே தோன்றலாம்.

அனந்தி சசிதரன் அல்லது சிவாஜிலிங்கம் இருவரில் ஒருவர் பொது வேட்பாளர் கடந்து, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடக் கூடிய ஏது நிலை தோன்றலாம் இதில் மீதமாக ஐங்கரநேசனும் ஸ்ரீகாந்தாவும், விக்னேஸ்வரன் அல்லது சுரேஷ் பிரேமச்சந்திரனும் தான் மிஞ்சப் போகிறார்கள். ஆகவே தமிழ்ப் பொது வேட்பாளர் எப்படி சாத்தியப்பட போகிறது, இவர்களின் எஜமானாகிய டெல்லி இவர்களை எப்படி வழிநடத்த, போகிறது என்பதுதான் மிகப்பெரிய எதிர்பார்ப்பு.

"எமனுக்கு இரும்பைக் கொடுத்தவர்கள்" என்று ஒரு கிராமத்து பழமொழி உண்டு. அந்த இரும்பைக் கூட இயமனிடமிருந்து பிடுங்கி எடுப்பதற்கு தந்திரம் தெரிந்தவர்கள்தான் இந்த தமிழ் அரசியல்வாதிகள். சந்தர்ப்பங்கள் புரிய வைத்திருக்கின்றன.

சிவில் பிரமுகர்கள் என்னும் நிலையை இவர்கள் இழந்து

தொடர்ச்சி▼



# அரசியல் கூட்டுக்குள் சங்கமம் ஆகினார்கள் சிவில் பிரமுகர்கள்!

தொடர்ச்சி▲

விட்டனர். தேர்தல் அரசியலை சிவில் சமூகம் முன்னெடுக்க முடியாது. அது அரசியல் கட்சிகளால்தான் முடியும். ஆகவே அரசியல் செய்வது வேறு. அரசியல்வாதி வேறு. அரிசியில் இருந்து அரப்பு வரைக்கும் அரசியல்தான். சிவில் சமூகங்களுக்கு என்று ஓர் எல்லை உண்டு. அந்த எல்லையை மீறினால் தங்கள் சுயத்தையும் சார்பின்மையையும் அவர்களாகவே இழந்து விடுவார்கள் என்பது இயற்கை விதிக் கோட்பாடு.

உலகளாவிய சிவில் சமூகங்கள் தத்தமது இனக்குழுமங்களுக்கு உரிமை சார்ந்து செயல்படுவது என்பது வழமைதான். ஆனால் அவர்கள் தேர்தல் அரசியலை முன்னெடுப்பதில்லை.

டெல்லியில் காங்கிரஸ் ஆட்சியில் ஊழலுக்கு எதிராக அண்ணா ஹசாரே நடாத்திய போராட்டம் பா.ஜ.கவை ஆட்சிக்கு கொண்டு வர உதவியது.

அரபுலகப் புரட்சியிலும் ஏகாதிபத்திய அரசியல் இருந்தது.

விவசாய சட்டத்திற்கு எதிரான டெல்லியில் நடந்த தொடர் போராட்டத்தின் பின்னே ஆம் ஆத்மி கட்சி இருந்தது. அதனால் அந்தக் கட்சி பஞ்சாபில் ஆட்சியையும் கைப்பற்றியது."

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான போராட்டம் பெயரளவில் சிவில் அமைப்புகளாக இருந்தாலும் அதை அரசியல் கட்சிகளே வழிநடத்தின. குறிப்பாக இலங்கையிலே அதிக தொழிற்சங்கங்களை வழிநடத்தும் ஜே.வி.பியே அதன் பின்னணியாக அதிகம் செயல்பட்டது. அதிகாரப் பசி என்பதைவிட வயிற்று பசிக்கான வாழ்வியல் போராட்டம் என்பதால் இலகுவாக அது மக்கள் மயமானது. ஆகவே எல்லாவற்றுக்கும் ஒவ்வொரு பின்னணி உண்டு.

அரசியல் என்பது வெளியே தெரியும் மிதப்புக்களை வைத்து தீர்மானிப்பது அல்ல. அடியில் மறைந்திருக்கும் ஈயத்தையும் கவனிக்க வேண்டும்.

இந்தஓ பொது வேட்பாளர் முறைமையை பொது வாக்கெடுப்பாக மாற்றி இருந்தால் மக்கள் ஏகோபித்து ஆதரவை நல்கி இருப்பார்கள். அது ஒரு கோட்பாட்டு ரீதியான தீர்மானமாக மாறும். வடகிழக்கில் உள்ள தமிழ்த் தேசிய கட்சிகளை சாராதவர்கள் கூட இதற்கு வாக்களித்து அந்தக் கோட்பாட்டை வெற்றி பெறச் செய்திருப்பார்கள். தேர்தல் என்று வரும் பொழுது கோட்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்காது, கட்சிகளே முக்கியத்துவம் பெறும் என்பதே கடந்த கால பட்டறிவு. கள யதார்த்த அனுபவம். இதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்விடயத்தைத் தமிழரசுக. கட்சியும் ஆதரித்து இருந்தாலும் கூட, மக்கள் மத்தியிலே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான அரசியல் தீர்மானங்கள் இருப்பதனால் இலக்கை நிறைவு படுத்துவது எட்டாக் கனியாகவே மாறி இருக்கும்.

இவர்கள் தாங்கள் தீர்மானித்து விட்டால் தமிழ் மக்கள் வாக்கு போடுவார்கள் என எதன் அடிப்படையில் நம்புகிறார்கள் என்று தெரியவில்லை. இதில் உள்ள கட்சிகளுக்கு வடக்கு, கிழக்கில் எங்கும் ஒழுங்கான கிளைகள் இல்லை. சிவில் அமைப்புகள் கூட வலிமையான கட்டமைப்போடு எந்த ஓர் அமைப்பும் இல்லை. எல்லோரும் கனவு காணலாம். அது கனவாகவே போய் விடக் கூடாது.

அதி தீவிர களப்பணி இல்லாமல் இலக்குகளை நிர்ணயிப்பது என்பது கடலில் மழை பெய்வதற்கு ஒப்பானது. இதைப் புரிந்து கொள்ளாமல் இருப்பது வேதனையே. அல்லது புரிந்தும் புரியாதது போல் இருக்கிறார்களா எனும் சந்தேகமும் எழுகிறது.

இவர்களால் சூட்டப்பட்டிருக்கும் புதிய அரசியல் கூட்டின் "தமிழ்த் தேசியப் பேரவை" என்பது 2017ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில. ஒலித்தது. அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சில சமூக அமைப்புகளை இணைத்து "தமிழ் தேசியப் பேரவை" என பெயர் சூட்டி தேர்தலை எதிர்கொண்டது. பதிவில் இல்லாத போதும் கூட ஒரு கட்சி பயன்படுத்திய பெயரை அவர்கள் ஒப்புதல் இல்லாமல் பயன்படுத்துவது அறத்துக்கு தகுமா எனும் சமூக நீதிக் கேள்வி எழுகிறது.

மூத்த ஊடகவியலாளர் அரசியலுக்கு வந்து தனது ஊடக ஜாம்பவான் எனும் உயரிய நிலையை விமர்சனத்திற்கு உட்படுத்தியது போல் இந்த பத்தி எழுத்தாளர்களும் இனி யதார்த்தமாக அவர்களது எழுத்துக்களை பலரும் நோக்க முடியாத நிலை தோன்றலாம். ஏனெனில் அரசியல் சாயம் இவர்களை இயல்பாகவே மகுடம் சூடிக் கொள்ளும் போது அது இவர்களின் எதிர்கால கருத்தியல் செயற்பாட்டுக்கு பெரும் சவாலாகவே அமையும். இவ்வாறான பரிதாபமான நிலை அவர்களுக்கு ஏற்படப் போகிறது.

ஆகவே இந்த கெமிஸ்ட்ரி இல்லாத முயற்சி எங்கே போய் முடியப் போகிறதோ...? அரசியலில் கணக்குகள் கூட்டல், பெருக்கல் மட்டுமல்ல கழித்தலும் உண்டு.பழித்தலும் உண்டு. மழித்தலும் உண்டு. இதில் இவர்கள் நிலை எதுவோ....?

# யாரந்தத் தமிழ்ப் பொது வேட்பாளர்?

## பத்தியாளர்கள் எப்போது கண்டடைவார்கள்?





புருஜோத்தமன் தங்கமயில்

ஜனாதிபதித் தேர்தல், ஒக்டோபர் 12ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறலாம் என்று தெரிகிறது. நீண்ட சோதிட ஆலோசனைகளுக்குப் பின்னராக ரணில் விக்கிரமசிங்க, இந்தத் திகதியை தேர்ந்தெடுத்திருக்கிறார் என அவருக்கு நெருக்கமானவர்கள் கூறுகிறார்கள். ஒக்டோபர் 05 மற்றும் 12ஆம் திகதிகளை தேர்தலுக்கான தினங்களாக சோதிடர்கள் பரிந்துரைத்திருக்கிறார்கள். அதில், ஒக்டோபரின் இரண்டாம் சனிக்கிழமையை ரணில் தேர்வு செய்திருக்கிறார். ஜனாதிபதித் தேர்தலை ஒத்திப்போடும் திட்டங்கள் கை கொடுக்கப்போவதில்லை என்ற நிலையில், அவர் தேர்தலை எதிர்கொள்ளும் கட்டத்திற்கு வந்துவிட்டார். அதன் பிரகாரம் பார்த்தால், ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் சரியாக 103 நாள்கள் மாத்திரமே இருக்கின்றன. தேர்தல் நடைபெறும் தினத்துக்கு குறைந்தது ஒரு மாதத்திற்கு முன்னர் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அது,இரண்டு மாத கால இடைவெளி வரையில் இருக்கலாம். கடந்தமுறை வேட்பு மனு ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கும் தேர்தலுக்கும் இடையில் சுமார் ஒன்றரை மாத இடைவெளி காணப்பட்டது. இம்முறை வேட்பு மனு கோரப்பட்டு ஒருமாத கால இடைவெளியில் தேர்தல் நடைபெறுமாக வைத்துக் கொண்டாலும், வேட்பாளர்களாக தங்களை முன்னிறுத்துபவர்களுக்கு இன்னும் இருப்பது இரண்டரை மாதங்கள்தான். அதற்குள் அவர்கள் தங்களை வேட்பாளராக முன்னிறுத்தி,அதற்கான தேர்தல் பிரச்சார களத்தில் குதித்தாக வேண்டும்.

இம்முறை பிரதான ஜனாதிபதி வேட்பாளர்கள் யார் என்பது நாட்டு மக்களுக்கு தெரிந்துவிட்டது. தேர்தல் களத்தில் முன்னிலையில் இருக்கும் சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸாநாயக்கவோடு ரணிலும் பொருதிப் பார்ப்பது என்று முடிவுக்கு வந்துவிட்டார். ஜனாதிபதித் தேர்தலை, தமிழ்த் தேசிய அரசியலின் பொது வாக்கெடுப்பாக கருதி தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்த வேண்டும் என்று அரசியல் பத்தியாளர்கள் சிலரும், அவர்களினால் வழிநடத்தப்படும் சிவில் சமூக அமைப்புக்களும் வலியுறுத்துகின்றன. ஆனால், அவர்கள் கடந்த சில மாதங்களாக தமிழ்ப் பொது வேட்பாளர் கோசத்தோடு வலம் வந்தாலும், அதற்கு தகுதியான நபர் யார் என்பது தொடர்பில் இதுவரை எந்தவித அறிவிப்பையும் வெளியிடவில்லை. பொது வேட்பாளராக போட்டியிடுவதற்கு சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட சிலர் ஆர்வம் வெளியிட்டாலும் அது, அரசியல் பத்தியாளர்களினால் கருத்தில் எடுக்கப்படவில்லை.

தமிழ்ப் பொது வேட்பாளராக போட்டியிடும் நபர், ஜனாதிபதித் தேர்தலில் கிடைக்கும் வாக்குகளை எதிர்காலத்தில் தன்னுடைய தனிப்பட்ட அரசியல் நலன்களுக்காக பயன்படுத்திவிடக் கூடாது என்பதை, முக்கியமான

தொடர்ச்சி ▼



# யாரந்தத் தமிழ்ப் பொது வேட்பாளர்?

# பத்தியாளர்கள் எப்போது கண்டடைவார்கள்?



தொடர்ச்சி ▲

வரையறையாக அரசியல் பத்தியாளர்கள் முன்வைக்கிறார்கள். இதனால், வடக்கு கிழக்கு பூராவும் அறிமுகமான ஒருவரை வேட்பாளராக கண்டடைவது என்பது பிரதான சிக்கலாகும். அப்படியொருவர் அடையாளம் காணப்பட்டு, வேட்பாளராக அறிவிக்கப்பட்டாலும் அவர் காலம் பூராவும் தங்களின் அரசியல் விருப்பு வெறுப்புக்களை மறந்து, பத்தியாளர்களின் நிலைப்பாடுகளை பிரதிபலித்தாக வேண்டும் என்பது சிக்கலான விடயம். அடிப்படையில் இவ்வாறான சிக்கல்களுடன்தான் ஒருவர் தமிழ்ப் பொது வேட்பாளர் அடையாளத்துக்குள் வரமுடியும். இன நலனுக்காக தற்கொடைப் போராளிகள் ஆளுமை செலுத்திய தமிழ்த் தேசியப் போராட்டக் களத்தில், தேர்தல் அரசியல் – தனிப்பட்ட நலன்களைப் புறந்தள்ளி 'ஒருவர்' வாழ்நாளை அர்ப்பணிப்பது என்பது இயலாத காரிமல்ல என்பது, பத்தியாளர்களின் எதிர்பார்ப்பாக இருக்கலாம். ஆனால், அரசியல் பத்தியாளர்களில் அநேகரே தன் முனைப்பு (ஈகோ) மனநிலையில் நின்று நிகழ்கால அரசியலை அணுகுபவர்கள்தான். அதனால்தான், தங்களின் அரசியல் முன்னெடுப்புக்களை இறுதி செய்வதற்காக மக்களை உசுப்பேற்றும் நிலைக்கும் தங்களை தாழ்த்திக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். மக்களை உசுப்பேற்றுவது தொடர்பில், எந்தவித கூச்சமும் இன்றி, அரசியல் கட்சிகளுடனான சந்திப்பில் வெளிப்படையாக பேசவும் செய்கிறார்கள்.

பிளவு கண்டுள்ள தமிழ்த் தேசிய வாக்குகளை ஒருங்கிணைப்பதற்கான அடிப்படையில், ஜனாதிபதித் தேர்தலை கையாள்வதாகவும் அரசியல் பத்தியாளர்கள் கூறுகிறார்கள். தமிழ் வாக்குகளை ஒருங்கிணைப்பதற்கு நாடாளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல்கள், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஏன் கையாள முடியாது என்ற கேள்வி முக்கியமானது. ஜனாதிபதித் தேர்தலில் ஒருங்கிணைந்து வாக்களிப்பதைக் காட்டிலும், மற்றைய தேர்தல்களில் ஒருங்கிணைந்து வாக்களிப்பது என்பது, தமிழ்த் தேசியப் பிரதிநிதித்துவத்தை உச்ச அளவில் பேணுவதற்கு உதவும். ஆனால், அதற்கான முயற்சிகள் சாத்தியமில்லை என்று பத்தியாளர்களே ஊடகங்களில் பேசுகிறார்கள். அதாவது, ஜனாதிபதித் தேர்தல் தவிர்ந்த ஏனையை அனைத்துத் தேர்தல்களும் கட்சி, தனி ஆளுமை, பிரதேசம், சாதி, மதம் சார்ந்து வெற்றி வாய்ப்புக்களை தீர்மானிக்கும் நிலைக்கு நகர்ந்துவிட்டதாக பத்தியாளர்கள் கூறுகிறார்கள். தேர்தல் – வாக்கு அரசியலில், குறிப்பாக விருப்பு வாக்கு அரசியலில் மேற்குறிப்பிட்ட விடயங்கள் தாக்கம் செலுத்தும் காரணிகளே. அப்படியான நிலையில், அவ்வாறான தேர்தல் களங்களை ஒருங்கிணைப்பதற்கு பயன்படுத்துவது என்பது தங்களினால் முடியாத காரியம் என்பது பத்தியாளர்களுக்கு நன்றாக தெரிகின்றது. அதனால், ஜனாதிபதித் தேர்தலை பொது வாக்கெடுப்புக் களமாக கையாளப் போவதாக கூறுகிறார்கள். தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை ஆதரிக்கும் விக்னேஸ்வரனோ, முதல் வாக்கினை பொது வேட்பாளருக்கும் இரண்டாவது வாக்கினை தென் இலங்கை வேட்பாளருக்கும் வழங்கலாம் என்ற யோசனையை கிளிநொச்சியில் நடைபெற்ற மே தின நிகழ்வொன்றில் வெளியிட்டார்.

இந்த ஜனாதிபதித் தேர்தலை பொது வாக்கெடுப்புக்கான களமாக கருதி எதிர்கொண்டால், எதிர்கால ஜனாதிபதித் தேர்தல்களை தமிழ் மக்கள் எப்படி எதிர்கொள்வது என்பது முக்கியமான கேள்வி. அந்தக் கேள்விக்கு ஏனோதானோ என்று யாரும் பதிலளிக்க முடியாது. யார் விரும்பினாலும் இல்லையென்றாலும் இலங்கைக்குள் சமஷ்டி அதிகாரப் பகிர்வு என்ற கட்டத்துக்கு தமிழ்த் தேசிய அரசியல் களம் வந்துவிட்டது. இன்றைக்கு யாரும் தனி நாட்டுக் கோரிக்கையோடும் இல்லை. அப்படியான கட்டத்தில் இலங்கை என்ற நாட்டுக்குள் நடத்தப்படும் தேர்தல்களை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயம் தமிழ் மக்களுக்கு உண்டு. அதில் ஜனாதிபதித் தேர்தலும் தவிர்க்க முடியாதது. இங்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போன்று சிந்திப்பவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஏனெனில், ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிப்பது என்பது அவர்களின் நிலைப்பாடு. அதனை மக்கள் ஆதரிக்கிறார்களாக இல்லையா என்பதெல்லாம், அந்தக் கட்சியின் யோசனையிலேயே இல்லை. முன்னணியின் ஒற்றை இலக்கு யாழ்ப்பாணத்தில் ஒற்றை ஆசனம். அதனால், அந்தக் கட்சிக்கு வடக்கு கிழக்கு முழுவதுக்குமான அரசியல், அதன் தாற்ப்பரியம் தொடர்பில் கவனம் இருக்க வேண்டியதில்லை. ஆனால், தமிழ்த் தேசிய அரசியலின் ஆழத்தை உணர்ந்து செயற்படும் தரப்பினருக்கு பொறுப்புணர்வு என்பது அதிகமானது. ஒரு தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது, அதன்மூலம் சொல்லப்படும் செய்தி, ஆக்கபூர்வமானதாக இருக்க வேண்டும். அது, தமிழ்த் தேசிய அரசியல் இருப்புக்கான எதிர்மறைச்

தொடர்ச்சி ▼

# யாரந்தத் தமிழ்ப் பொது வேட்பாளர்?

## பத்தியாளர்கள் எப்போது கண்டடைவார்கள்?



தொடர்ச்சி ▲

செய்தியை வெளிப்படுத்தி விட்டால், எட்டு தசாப்த கால தமிழ்த் தேசிய போராட்ட வரலாறு காணாமல் போய்விடும்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலை பொது வாக்கெடுப்புக்கான களமாக கையாள முயல்பவர்கள், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் என்ன செய்ய வேண்டும் என்ற அறிவித்தலையும் இப்போது வெளியிட வேண்டும். ஏனெனில், இலங்கையில் எந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பௌத்த சிங்கள வேட்பாளர்களே, பிரதான வேட்பாளர்களாக இருப்பார்கள். அவர்களை மீறி இன்னொருவர் வெற்றி வேட்பாளராக மாறுவதற்கான எந்த வாய்ப்பும் இல்லை. நாட்டின் இனப் பரம்பலில் 73 வீதத்துக்கும் அதிகமானவர்கள் சிங்களவர்களாக இருப்பதனால், அதுவே தொடரும். அப்படியான நிலையில், சிங்கள வேட்பாளர்கள் பிரதான போட்டியாளர்களாக இருக்கின்ற களத்தினைத் தொடர்ந்தும் புறக்கணித்து, பொது வேட்பாளர் கோசத்தோடுதான் இருப்போம் என்பது நடைமுறை அரசியலுக்கு பொருத்தமானதில்லை. அது, தமிழ் மக்களை இன்னும் மோசமாக துருவநிலைப்படுத்தும்.

நிகழ்வுகளுக்கு பிரதிபலிக்கும் அரசியலை மாத்திரம் தமிழ்த் தேசியப் பரப்பு தொடர்ச்சியாக செய்து வருகின்றது. அரசியல் இலக்குளை அடைவதற்கான படிமுறைகளை ஒழுங்குபடுத்துவது, அதற்கான செயற்திட்டங்களை முன்னெடுப்பது என்பது தமிழ் அரசியல் பரப்பில் தற்போது இல்லை. அது தொடர்பில் சிந்திக்கும் நபர்களையும்கூட பிரதிபலிக்கும் அரசியல் தூர விலக்கி வைத்து விடுகின்றது. பொது வேட்பாளர் கோசமும் பிரதிபலிக்கும் அரசியலின் ஒரு வடிவமே. ஏனெனில், அந்த விடயத்தை முன்னெடுக்கும் பத்தியாளர்கள் உள்ளிட்ட தரப்பினரிடம் எந்த விதமான எதிர்கால அரசியல் அடைவு இலக்குகளும் இல்லை. தமிழ் மக்கள் ஒன்றாக நிற்கிறார்கள் என்ற செய்தியை சர்வதேசத்துக்கு சொல்வது என்பது தான் அவர்களின் ஒற்றை நிலைப்பாடு. தமிழ்த் தேசிய அரசியல் இந்த நாட்டில் எப்போது தோற்றம் பெற்றதோ, அன்று முதல் தமிழ் மக்கள் தங்களின் ஒருங்கிணைந்த நிலைப்பாட்டை பல நூறு தடவைகள் நிரூபித்தாகிவிட்டது. அதனை சர்வதேசம் கண்டுவிட்டது. அப்படியான நிலையில், பொது வேட்பாளர் விடயத்தின் மூலம்தான் அதனை உணர்த்த வேண்டும் என்பதெல்லாம் அபத்தமான வாதம். அதனால், அடுத்த கட்ட நகர்வு என்று எதுவுமே கண்முன்னால் தெரியாத போது, அதற்கான முயற்சிகளை தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள், தன்முனைப்பு மன நிலைகளுக்கு அப்பால் ஒன்றுமில்லை என்றே கொள்ள வேண்டியிருக்கின்றது.

தமிழரசுக் கட்சி பொது வேட்பாளருக்கான ஆதரவுக் கட்டத்துக்கு ஒருபோதும் வராது. அந்தக் கட்சியின் மத்தியகுழுவுக்குள் பொது வேட்பாளருக்காக வாதாடும் நபர்கள் யாரும் இல்லை. சிவஞானம் சிறீதரனும், இன்னும் ஒரு சிலரும்கூட பொது வேட்பாளருக்கு தாங்கள் ஆதரவளிப்பதாக கூட்டக் குறிப்புக்களில் பதிவு செய்வதில் மாத்திரமே குறியாக இருந்தார்களே அன்றி, அதற்கான வாதாடுவதற்கு தயாராக இருக்கவில்லை. வடக்கு கிழக்குப் பூராவும் கட்டமைப்பைக் கொண்டிருக்கின்ற தமிழ்த் தேசியக் கட்சியென்றால், தமிழரசுக் கட்சி மாத்திரமே. ஜனாதிபதித் தேர்தல் போன்ற வடக்கு கிழக்கு மக்களை முழுவதும் ஒருங்கிணைக்க வேண்டிய தேர்தலொன்றை எதிர்கொள்வது என்பது அவ்வளவு இலகுவான காரியமல்ல. அரசியல் பத்தியாளர்களில் அநேகர், தங்களின் வீடுகளைத் தாண்டுவதற்கே தயங்குபவர்கள். அவர்களின் அதிக பட்ச பயணத்தூரம் யாழ்ப்பாணம், நல்லூர் என்ற அளவில் சுருங்கிவிடும். அப்படியான நிலையில், வடக்கு கிழக்கு பூராவும் மாதக் கணக்கில் தங்களின் தொழில் நடவடிக்கைகளை புறந்தள்ளி நின்று, தேர்தல் பிரச்சாரப் பணிகளுக்காக பயணிப்பார்களா? தேர்தல் தீர்மானங்களை மாத்திரமே பத்தியாளர்களான தாங்கள் எடுப்போம், அதற்கான களப்பணியை கட்சிகள் செய்ய வேண்டும் என்ற மனநிலையில் இருப்பது ஒரு வித ஆண்டான் மனநிலை. ஒரு செயற்திட்டத்தை மக்கள் மத்தியில் முன்மொழிந்தால், அந்தச் செயற்திட்டத்தை வெற்றிகரமான மாற்றுவதற்கான உழைப்பை கொடுத்தாக வேண்டும். மாறாக, மற்றவர்களின் தோள்களில் பயணிக்க நினைக்கக் கூடாது.

பொது வேட்பாளருக்கான கோசத்தோடு முன்வந்திருக்கின்ற பத்தியாளர்கள், அதற்கான வேட்பாளரை கண்டடைந்து மக்கள் மத்தியில் பிரபலப்படுத்த வேண்டும். அதனைச் செய்யாது, ஒப்புக்காக ஒருவரை தேர்தலில் நிறுத்தி, அவரை கடந்த காலங்களில் சிவாஜிலிங்கம் ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிட்டது போன்று இன்னொரு சிவாஜிலிங்கமாக மாற்றக்கூடாது. அப்படியான நிலையை தோற்றுவித்தால், அரசியல் பத்தியாளர்களை தமிழ்த் தேசிய வரலாறு ஒருபோதும் மன்னிக்காது. ஏற்கனவே, அரசியல் பத்தியாளர்கள், புலமையாளர்கள் கூடாரம் தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பினை தோற்றுவித்து தோற்கடித்ததன் மூலம், தமிழ் சிவில் சமூக வெளியை காணாமலாக்கியிருக்கிறார்கள். அப்படியானதொரு நிலையாக, பொது வேட்பாளர் விடயத்தையும் முன்நகர்த்தி, தமிழ்த் தேசிய அரசியலில் கறுப்பு புள்ளிகளை சேர்க்காது, பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.



# கிங்ஸிலி இராஜநாயகத்தைச் சுட்டமையால்தான் அரியநேத்திரன் நாடாளுமன்ற உறுப்பினரானார்!

## இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் தெரிவிப்பு!

**(பழுவூரான்)**

2004 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலிலே மட்டக்களப்பு மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட கிங்ஸிலி இராஜநாயகத்தை சுட்டுவிட்டார்கள். பின்னர் தான் பா.அரியநேத்திரன் அவ்விடத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார் என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக களுவாஞ்சிகுடியில் மூடப்பட்டுக்கிடந்த பழைய நீதிமன்ற வீதி கடந்த சனிக்கிழமை மாலை இராஜாங்க அமைச்சரினால் திறந்து வைக்கப்பட்டு புனரமைப்பு வேலைகளை ஆரம்பித்து வைக்கப்பட்டன. அங்கு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்நிகழ்வு மண்முனை தென் எருவில்பற்றுப் பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பூ.பிரசாந்தன், கிராம பெரியோர்கள், களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

நான் சிறிய வயதில் களுவாஞ்சிகுடிப் பகுதிக்கு வந்ததில்லை. காரணம் நான் 1991 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து விட்டேன். இயக்கத்திலிருந்த போது களுவாஞ்சிகுடியைச் சேர்ந்த கரிகாலன், சுரேஷ், கண்ணன், ரகு, ஆகியோரோடுதான் செயற்பட்டேன்.

அவர்கள் இப்பகுதியைப் பற்றி எனக்கு தெரிவித்திருந்தார்கள்.

இந்நிலையில்தான் நாம் இன்னமும் வீதிகள் இல்லாமல், ஓர் அடக்குமுறைக்குள் இருந்து வந்திருக்கின்றோம் என்பதை உணரமுடிகின்றது. எமது மண் மெல்ல மெல்ல உயற்சியடைந்து வருகின்றது. நாமும் உயர வேண்டும்.

நாங்கள் தனிநாடு கேட்டு போராடி பலவற்றை இழந்து விட்டோம். தற்போது தழிழருக்படிகு உரிமையும், அபிவிருத்தியும் தேவையாகவுள்ளது.

அபிவிருத்தியை நாங்கள் 2008 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மெல்ல மெல்ல மேற்கொண்டு வருகின்றோம்.

தொடர்ச்சி ▼





# கிங்ஸிலி இராஜநாயகத்தைச் சுட்டமையால்தான் அரியநேத்திரன் நாடாளுமன்ற உறுப்பினரானார்!

தொடர்ச்சி▲

ஆனாலும் எமது மாவட்டத்தின் தொழில் துறை, உற்பத்தி இன்னமும் வளற்சி யடையாமல் அடிமட்டத்திலேயேதான் காணப்படுகின்றது.

எனவே மக்களுக்குத் தேவையான அபிவிருத்திப் பணிகளை மிகவும் நுட்பமாக செய்து வரவேண்டிய தேவை உள்ளது.

யாரும் தற்போது "ஈழத்தைப் பெற்றுத் தருவேன்" என பேசமுடியுமா? முடியாது. மாறாக மாகாணசபை முறைமையைப் பற்றித்தான் பேசமுடியும்.

எனவே உரிமை சார்ந்த விடயங்களிலே மாகாணசபை முறைமையை நாங்கள் கையில் எடுக்க வேண்டும். இதனையும் கையில் எடுக்காமல் தட்டிவிட்டது.

களுவாஞ்சிகுடித் தம்பி நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் ஆலோசகர் சுமந்திரன்தான் என நாடாளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம் பேசியுள்ளார்.

மாகாண சபையை இல்லாமலாக்கியவர் சுமந்திரன்தான்.

இறுதியாக கலைக்கப்பட்டது தான் வட மாகாணசபையாகும். அப்போது முதலமைச்சராக இருந்த சி.வி.விக்னேஸ்வரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறுகின்றபோது அவரும் கஜேந்திரகுமாரும் சேர்ந்து அவர்களுடைய கட்சிக்கு வடக்கிலே ஒரு பலவீனம் ஏற்பட்டுவிடும் என்பதற்காக தமிழர்கள் போராடி இரத்தம் சிந்திப் பெற்ற மாகாண சபையை விட்டு விட்டுள்ளோம்.

இதனால் நாம் அலைந்து திரிகின்றோம்.

அரசாங்கத்திடமிருந்து ஒன்றையும் பெற்றுக் கொள்ளமாட்டோம் என்பவர்கள் நாடாளுமன்றத்திலே அனைத்து சுக போகங்களையும் அனுபவிக்கின்றார்கள்.

60 வருடங்களாக அரசாங்கத் திடதிருந்து ஒன்றையுமே பெற்றுக் கொள்ள மாட்டோம் என்பவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான அனைத்து சலுகைகளையும் அனுபவிக்கின்றார்கள். உரிமையை பெற்றுக் கொடுக்க முடியாதுள்ளனர்.

2004 ஆம் ஆண்டு தேர்தலிலே நாடாளுமன்ற 2004 ஆம் ஆண்டு கிங்ஸிலி இராஜநாயகத்தைச் சுட்டு விட்டார்கள். பின்னர்தான் அரியநேத்திரன் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.

அப்போது அரியநேத்திரன், தங்கேஸ்வரி, ஜெயானந்தமூர்த்தி ஆகிய மூவரும் மட்டக்களப்பில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார்கள்.

அப்போது யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. வாகரையில் மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள். வாகரை மக்களை மீட்டு வாருங்கள் என நான் இந்த மூவரிடமும் தெரிவித்தேன். "தம்பி நீங்கள் கூறுவது நல்ல விடயம்தான். எதற்கும் நாங்கள் வன்னியில் கதைத்து விட்டு சொல்கின்றோம்" என அவர்கள் என்னிடம் தெரிவித்தார்கள்.

இவ்வாறானவர்கள் மாகாணசபைத் தேர்தலிலே வெளிப்படையாகவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்"க்கு உதவினார்கள். அதே அரியநேத்திரன் எனது காரியாலயத்திற்கு வந்து "தம்பி நாங்கள் வேலை செய்யலாமா?" எனக் கேட்டார். நீங்கள் சந்தோசமாக வேலை செய்யுங்கள் என தெரிவித்திருந்தேன். இவ்வாறான நடிகர்கள்தான் அவர்கள்.

மட்டக்களப்பு மக்களை அவர்கள் காப்பாற்றுபவர்களாக இருந்தால் அன்றே அவர்கள் முடிவெடுத்திருக்க வேண்டும். தற்போது சாணக்கியன், சுமந்திரன் போன்ற புதியவர்கள் வந்து உரிமையைப் பெற்றுத்தரப்போகின்றோம் என்று பேசுவது வேடிக்கையான விடயமாகும்.

நாங்கள் வரலாற்றிலே கடந்து வந்த கற்றுக் கொண்ட பாடங்களை வைத்துக் கொண்டு மக்களுக்குத் தேவையான விடயங்கள் என்ன? எதனைச் செய்யவேண்டும்? என்பதற்கிணங்க எமது கட்சி செயற்பட்டு வருகின்றது.

நாம் பட்டிருப்பிலே ஒசுசல, களுவாஞ்சிகுடி சந்தியிலே சிக்னல் லைட் உள்ளிட்ட பல விடயங்களை மிகவிரைவில் மேற்கொள்ளவுள்ளோம். மேலும் பேரும், புகழும் உள்ள ஒரு நகரமாக களுவாஞ்சிகுடி நகரை மாற்றுவதுதான் எமது நோக்கு. அதற்கு மக்கள் தலைவர்களை இங்கிருந்தே தெரிவு செய்ய வேண்டும்.

சரியான திட்டமிடலைச் செய்து கிழக்கு மாகாணசபையை தமிழர்கள் கைப்பற்றவேண்டும். இதற்கான திட்டமிடலை தற்போதிருந்தே ஆரம்பிக்க வேண்டும்.

மாற்று சமூகத்தைப் பற்றி நாம் பொறாமைப்பட்டு ஒன்றும் செய்ய முடியாது. அதனை முறி யடிப்பதற்கு எம்மிடம் என்ன திட்டமிடல் இருக்கின்றது.? தமிழரசுக் கட்சியிடமிருந்தால் நாம் தலைவணங்குகின்றோம். அவர்களிடம் ஒன்றுமே இல்லை. எமது கட்சியிடம் மாத்திரம்தான் 80 வீதமான திட்டங்கள் – பொருளாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்கள் – உள்ளனஎன அவர் இதன்போது எடுத்தியம்பினார்.

மாகாணசபையைத் தமிழர்கள் கைப்பற்றவேண்டும். இதற்கான திட்டமிடலை தற்போதிருந்தே ஆரம்பிக்க வேண்டும். – என்றார்.



# அமெரிக்கத் திறைசேரியின் ஆசியாவிற்கான பிரதி உதவி செயலாளர் இலங்கை வருகிறார்

அமெரிக்க திறைசேரியின் ஆசியாவிற்கான பிரதி உதவி செயலாளர் ரொபர்ட் கப்ரோத் அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தனது எக்ஸ் பதிவில் இதனை தெரிவித்துள்ளார்.

கப்ரோத் தனது விஜயத்தின் போது, அரச அதிகாரிகள் மற்றும் நிதித்துறை தலைவர்களுடன் கலந்துரையாடல்களை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

முன்னதாக, 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் இலங்கைக்கு விஜயம் செய்த ரொபர்ட் கப்ரோத், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்திருந்தார்.

# கச்சதீவு தொடர்பில் இந்தியாவுடன் புதிய உடன்படிக்கை எதுவுமில்லை

## இலங்கை வெளிவிவகார அமைச்சு தகவல்



பாக்கு நீரிணைக் கடற்பரப்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லை மற்றும் கச்சதீவு பிரச்சினை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையில் எவ்வித புதிய உடன்படிக்கையும் ஏற்படுத்திக்கொள்ளப்படவில்லையென இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

அது தொடர்பிலான எவ்வித பேச்சுகளும் இடம்பெறவில்லையென வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

பாக்கு நீரிணைக் கடற்பரப்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லை தொடர்பான விவகாரங்கள் மற்றும் கச்சதீவு பிரச்சினை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையில் விரிவான உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளதாக 'தி ஹிந்து' நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டிருந்ததாகக் குறிப்பிட்டு நேற்றைய "காலை முரசு" உட்பட சில செய்தி ஊடகங்களில் தகவல் வெளியாகியிருந்தது.

ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகள் தொடர்பான விவரங்கள் வெளியிடப்படவில்லை என இந்திய அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி 'தி ஹிந்து' செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் கூட இலங்கையில் வெளியான செய்தியில் கூறப்பட்டிருந்தது.

எனினும், அவ்வாறான பேச்சுவார்த்தைகள் இடம்பெறவில்லையென இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

ஆனால், உண்மையில் 'தி ஹிந்து' வெளியிட்ட செய்தியை சரிவரக் கவனிக்காமல் – சரிவரப் புரிந்து கொள்ளாமல் – இலங்கையில் அந்தத் தகவல் செய்தியாக்கப்பட்டமையே இக்குழப்பத்துக்குக் காராணம் எனத் தெரிகின்றது.

அந்தப் பத்திரிகையின் 'கோப்பிலிருந்து" அல்லது 'நூலகத்திலிருந்து' என்ற பகுதியில் சரியாக 'ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஜூன் 28, 1974 இல்' ஒரு சிறிய குறிப்புடன் நேற்று முன்தினம் அந்தச் செய்தி பிரசுரமாகியிருந்தது. கச்சதீவு ஒப்பந்தம் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் உருவாகிய காலத்தில் வெளியான செய்தியை ஒரு நினைவூட்டலாக அந்தப் பத்திரிகை பிரசுரிக்க, அது தற்போதைய செய்தி என்ற தவறான புரிதலில் 'காலை முரசு' உட்பட்ட பத்திரிகைகளில் வெளியாகி பல குழப்பங்களை ஏற்படுத்தி விட்டது.

ஆசிரியர் குறிப்பு:

இரு நாடுகளுக்கும் இடையிலான உணர்வுபூர்வமான ஒரு விடயத்தை ஒட்டி பிரசுரமான இந்தத் தவறான செய்தி வாசகர்களுக்கு ஏற்படுத்திய அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகிறோம். அதனைச் சுட்டிக் காட்டிய தரப்புகளுக்கும் நன்றி.

(ஆ – ர்)




# ரஷ்ய - உக்ரைன் யுத்தத்திற்காக இடம்பெறுகின்ற மனிதக் கடத்தலைத் தடுக்கப் புதிய பொறிமுறை!

நாட்டின் ஓய்வுபெற்ற இராணுவத்தினர் ரஷ்ய – உக்ரைன் யுத்தத்தில் சட்டவிரோதமாக ஈடுபடுத்தப்படும் விதத்தில் நடக்கும் மனிதக் கடத்தலை தடுப்பது தொடர்பில் இலங்கை – ரஷ்ய அதிகாரிகளின் பங்களிப்புடன் பொறிமுறையொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இலங்கை பிரதிநிதிகள் குழு அண்மையில் ரஷ்யா சென்றிருந்தபோது இந்த பொறிமுறை தயாரிக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தலைமையிலான இந்தக் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் உள்ளடக்கப்பட்டிருந்தனர்.

ரஷ்ய பிரதி பாதுகாப்பு அமைச்சர் மற்றும் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் தமது குழுவினருடன் கலந்துரையாடினர் என அந்தக் குழுவின் உறுப்பினர் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட தெரிவித்துள்ளார்.

இதன் பிரதிபலனாக மேற்படி இரண்டு அமைச்சுகளினதும் அரச அதிகாரிகள் மற்றும் ரஷ்யாவிற்கான இலங்கை தூதுவர் உள்ளிட்டோர் அடங்கிய ஒன்றிணைந்த குழுவொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த மனிதக் கடத்தலை மேற்கொண்ட கடத்தல்காரர்களினால் அந்த இராணுவத்தினரிடமிருந்து ஒரு பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகை திரட்டப்பட்டுள்ளதாக காமினி வலேபொட தெரிவித்துள்ளார்.

சுற்றுலா விசாவில் சென்று ரஷ்ய – உக்ரைன் யுத்தத்தில் பங்குபற்றிய நாட்டின் ஓய்வுபெற்ற இராணுவத்தினர் 17 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர்.




# ஜனாதிபதித் தேர்தலுக்கு தயாராகுமாறு பல அரச நிறுவனங்களுக்கும் அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலுக்கு தயாராகுமாறு, தேர்தல்கள் ஆணைக்குழுவினால் பல்வேறு அரச நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச அச்சகம், பொலிஸ், இலங்கை மின்சார சபை, நீர் வழங்கல் சபை உள்ளிட்ட அரச நிறுவனங்களுக்கு இது தொடர்பில் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம். எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு தேவையான அதிகாரிகள் மற்றும் வாகனங்களின் எண்ணிக்கை தொடர்பில் புள்ளிவிவர அறிக்கையைத் தயாரிக்குமாறும் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு சுற்றுநிரூபத்தின் ஊடாக அறிவித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.

தேர்தலொன்றுக்கு அவசியமான நடவடிக்கைகள் தயார்படுத்தப்பட்டு வருவதாக அரச அச்சகம் அறிவித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

முந்தைய வருடங்களைப் போலவே இப்போதும் மூலப்பொருள்களின் விலைகள் உயர்வடைந்து காணப்படுகின்றமையினால், முழுமையான செலவு தொடர்பில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருவதாக அரச அச்சகர் கங்கா கல்பனி லியனகே குறிப்பிட்டுள்ளார்.

# இணைய நிதி மோசடிக் குற்றங்கள் அதிகரிப்பு 30 சீனப் பிரஜைகள், 137 இந்தியர்கள் கைது!



இணைய நிதி மோசடிகளில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக இலங்கை கணினி அவசர நடவடிக்கை பிரிவு தெரிவித்தது.

இந்த விடயம் தொடர்பில் ஆண்டின் கடந்த 5 மாதங்களில் மாத்திரம் 890 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என அதன் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுணு பொல குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, இணையத்தைப் பயன்படுத்தி நிதி மோசடியில் ஈடுபட்டனர் எனக் கூறப்படும் 167 வெளிநாட்டவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன் மிக அண்மைய சம்பவம் நீர்கொழும்பில் நேற்று முன்தினம் இரவு பதிவாகியுள்ளது.

இதன்போது, 30 சீனப் பிரஜைகள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இணையத்தின் ஊடாக நிதி மோசடியில் ஈடுபட்டனர் என கூறப்படும் 137 இந்திய பிரஜைகள் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

# அரபிக் கடற்பிராந்தியத்தில் மீன்பிடியில் ஈடுபட வேண்டாம் என்று அறிவுறுத்தல்!



அரபிக் கடற்பிராந்தியத்திற்கு பயணிப்பதை மறு அறிவித்தல் வரைத் தவிர்க்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் மீனவர்கள் மற்றும் கடல்சார் செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கு அறிவுறுத்தியுள்ளது.

இந்தக் கடற்பிராந்தியத்தில் காற்றின் வேகம் மணித்தியாலத்திற்கு 70 முதல் 80 கிலோ மீற்றர் வரை அதிகரித்துக் காணப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதிகளில் கடல் கொந்தளிப்பாகக் காணப்படுமெனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

தற்போது இந்தக் கடல் பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் உடனடியாக கரைக்கு அல்லது பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இதனிடையே, மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும், வடக்கு, வட மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை, ஹம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் மணித்தியாலத்திற்கு 40 முதல் 50 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.



# கச்சதீவில் சில நடவடிக்கைகளில் இந்தியா இறங்க இலங்கை அனுமதி என்கிறார் விக்கி

(கே.வசந்தன்)

கச்சதீவில் சில செயற்பாடுகளை இந்தியா முன்னெடுக்க இலங்கை இடம் கொடுத்துள்ளதாக தான் அறிகிறார் என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி யின் தலைவரும், நாடாளுமன்ற உறுப் பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் பின் ஊடகவிய லாளர் ஒருவர் கச்சதீவு விவகாரம் தொடர்பில் கேள்வி எழுப்பிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

கச்சதீவு விடயம் பல காலமாக பேசப் பட்டு வரும் விடயம். இது நாடுகளின் இறைமை சம்பந்தப்பட்ட விடயம். அவர் கள் பேசித் தான் இதனைத் தீர்க்க வேண் டும். ஆனால் கச்சதீவில் சில நடவடிக்கை களில் இந்தியா இறங்குவதற்கு எமது நாடு இடம்கொடுத்துள்ளதாக நான் அறிகின்றேன். ஆகவே அது தொடர்பான ஏதாவது ஒரு உடன்பாடு ஏற்பட்டுள்ள தோ தெரியாது. – எனத் தெரிவித்தார்.



# தப்பியோடிய கைதிகள் இருவரைத் தேடி பொலிஸ் விசாரணைகள் முன்னெடுப்பு!

துல்ஹிரிய நீதிவான் நீதிமன்றத் தில் இருந்து தப்பிச்சென்ற கைதி கள் இருவரைத் தேடி விசாரணை கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் மோப்ப நாய்களும் இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள் ளன என பொலிஸார் குறிப்பிட்டனர்.

குருவிட்ட சிறைச்சாலையில் இருந்து துல்ஹிரிய நீதிவான் நீதிமன்றத் திற்கு அழைத்துச்செல்லப்பட்ட கைதி கள் இருவர் நேற்று முன்தினம் தப் பிச் சென்றுள்ளனர்.

திருட்டுக் குற்றங்கள் தொடர்பில் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த அவர்கள் இருவரும் ஹொரணையை சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் தெரி வித்தனர்.







# காணாமல்போன சுற்றுலாப் பயணியான இஸ்ரேலிய இளம் பெண் கண்டுபிடிப்பு!

## 3 நாள்களின் பின் சல்லியில் மயங்கிய நிலையில் மீட்பு

**(எஸ்.கீதபொன்கலன், ஹஸ்பர் ஏ.ஹலீல்)**

இஸ்ரேல் நாட்டில் இருந்து இலங்கைக்கு வருகை தந்த 25 வயதுடைய பெண் சுற்றுலாப் பயணி ஒருவர் திருகோணமலையில் மர்மமான முறையில் காணாமல் போன நிலையில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலையீட்டில், மூன்று நார்களுக்குப் பிறகு நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

தமர் அமித்தாய் என்ற அந்தப் பெண் கடந்த வியாழக்கிழமை முதல் காணாமல் போயிருந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் திருகோணமலை உப்புவெளி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த இஸ்ரேலிய பெண் கடந்த 22ஆம் திகதி இலங்கை வந்தார் எனவும், பின்னர் திருகோணமலை பகுதிக்கு விஜயம் செய்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை பகுதியில் உள்ள ரொலக்ஸ் என்ற விடுதியில் அவர் முன்பதிவு செய்ததன் மூலம் தங்கியிருந்ததார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் கடந்த 27ஆம் திகதி முதல் அவர் காணாமல் போயுள்ளார் என விடுதியின் உரிமையாளர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்தனர்.

இந்தச் சுற்றுலாப் பயணியைத் தேடிக் கண்டுபிடிக்க முழு வீச்சில் நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ், இராணுவம், பிரதேச செயலகம், உப்புவெளி பிரதேச சபை, கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியகம் ஆகியவற்றுக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

ஆளுநரின் பணிப்புரைக்கு அமைய, இந்தத் தரப்பினர் தேடுதல் பணியில் ஈடுப்பட்டு, மர்மமான முறையில் காணாமல் போன பெண்ணை மயங்கிய நிலையில் சல்லிக் கோவிலுக்கு அருகில் நேற்று மீட்டு எடுத்துள்ளனர்.

அந்தச் சுற்றுலாப் பயணியை மருத்துவ பரிசோதனையின் பின், அவருடைய நாட்டுத் தூதரகத்தில் ஒப்படைக்குமாறு ஆளுநரால் கிழக்கு மாகாண சுற்றுலா பணியத்திற்கு பணிப்புரை விடுக்கப்பட்டது.



# இன்றைய ராசி பலன்கள் - 30.06.2024



## மேஷம்

இன்று அனுகூலமான நாள். இன்று வெளிப்படையாக இருப்பீர்கள். உங்கள் செயல்களில் உறுதியுடனும் நேர் மறையாகவும் இருங்கள்.

உங்கள் பணியை முறையான அணுகுமுறையுடன் கையாள வேண்டும் நேர்மறையான பலன்களைப் பெறுவதற்கு இது மிகவும் அவசியம்.

குடும்பப் பிரச்சினை ஒன்றின் காரணமாய் உங்கள் துணையுடன் மோதல் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். நட்பான அணுகுமுறை நன்மை தரும்.

தேவையற்ற செலவினங்களை சந்திக்கும் கட்டாயம் உண்டாகும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

நடப்பவைகளை லேசாக எடுத்துக்கொள்வது நல்லது. அதிகமாக யோசிப்பதையும் மிகுந்த உணர்ச்சிவசப்படு தலையும் தவிர்க்க வேண்டும்.



## ரிஷபம்

சில நேர்மறையான மாற்றங்கள் உங்களை மகிழ்ச்சியான மனநிலையில் வைத்திருக்கும். உங்களிடம் காணப்படும் உறுதி உங்கள் வெற்றிக்கு வழிகாட்டும்.

உங்கள் பணிகளை திட்டமிட்டு ஒழுங் கமைத்துக்கொள்ள வேண்டும். பணிச் சுமை காரணமாக நீங்கள் பணியில் தவறுகள் செய்ய நேரலாம்.

மிகுந்த பாதுகாப்பற்ற உணர்வின் காரணமாக உங்கள் துணையிடம் கடுமையாக நடந்துகொள்ள நேரலாம். உங்கள் துணையிடம் பக்குவமான அணுகுமுறையை கையாள வேண்டும்.

பணப் பற்றாக்குறையை சந்திப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றது.

தலைவலி அல்லது தொண்டை சம்பந்தமான வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது.



## மிதுனம்

இன்றைய நாள் முற்போக்கான நாளாக அமைய நீங்கள் தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும். கவலையை விட்டொழித்து நம்பிக்கையுடன் இருங்கள்.

நீங்கள் செய்கின்ற பணியில் நல்ல பலன்களைக் காணலாம். நீங்கள் உங்கள் சகபணியாளர்களின் ஆதரவைப் பெறு வீர்கள்.

உங்களின் நட்பான அணுகுமுறை மூலம் உங் களின் துணையை மகிழ்விப்பீர்கள். இது அவருடனான புரிந்துணர்வை அதிகரிக்கும்.

உங்களிடமுள்ள பணத்தைக் கொண்டு நலமாக இருப்பீர்கள். நீண்ட நாள் நிலுவையில் உள்ள பணம் கைக்கு கிடைக்கும்.

ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். உங்களிடம் ஆற்றல் மிகுந்து காணப்படும்.



## கடகம்

முக்கியமான முடிவுகள் எடுக்கும் போது சிறிது கவனமாக இருக்க வேண்டும். இல்லாவிடில் பிரச்சினைகளைச் சந் திக்க நேரும்.

நீங்கள் பணி நிமித்தமாக ஒரு சிறிய பயணம் ஒன்றை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

உங்கள் மனதில் காதல் வயப்பட்ட எண்ணங்கள் காணப்படும். உங்கள் துணையுடனான நடத்தையில் அது வெளிப்படும்.

நல்ல விசேஷங்களுக்குகாக பணம் செலவு செய்ய நேரிடும். உங்கள் உடன் பிறந்தோர் வீட்டு விசேஷங் களில் பங்கேற்பீர்கள்.

இன்று மிகுந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். இது உங்கள் ஆரோக்கியத்தை நன்கு பராமரிக்க உத வும்.



## சிம்மம்


இன்று உற்சாகமாக காணப்படு வீர்கள். அதனால் திருப்தி ஏற்படும். உங்கள் இலக்குகளில் வெற்றி அடை வீர்கள்.

உங்களின் திறமை காரணமாக பணிகளை செவ்வனே செய்து முடிப் பீர்கள். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக் கும்.

உங்கள் மனதில் உணர்ச்சிகரமான உணர்வுகள் காணப்படும். உங்கள் துணையுடனான உறவை இது வலுப்படுத்தும்.

நிதிநிலைமை நன்றாக இருக்கும். உங்களால் வங்கி-யில் பணத்தை சேமித்து சேமிப்பை அதிகமாக்க முடியும். இது உங்களுக்கு திருப்தியளிக்கும்.

மகிழ்ச்சியின் காரணமாக இன்று ஆற்றலுடனும் துடிப்புடனும் காணப்படுவீர்கள்.



## கன்னி

பயண அலைச்சல்களும் அதன் காரணமாக சோர்வும் காணப்படும். உங்கள் முயற்சியில் நல்ல பலன்களைப் பெறுவதற்கு உங்களை அமைதியாக வைத்திருக்க முயலுங்கள்.

மிகுந்த முயற்சிகளை எடுத்து நிறைய வேலைகள் செய்த பொழுதும் உங்கள் மேலதிகாரிகளிடமிருந்து உங்களுக்கு பாராட்டுகள் கிடைக்காது.

உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த வேண்டும். உங்கள் துணையிடம் சாந்தமான அணுகுமுறை வேண்டும். உங்கள் பதட்டமான மனநிலையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவது நல்ல புரிந்துணர்வுக்கு அனுகூலமாக அமையாது.

பணம் நிறைய கிடைக்காது. ஆனால் கடனுக்கு விண்ணப்பித்தால் உங்கள் கடனுக்கான ஒப்பளிப்பு கிடைக்கும்.



## துலாம்

நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். நிகழ்வுகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

பணிச்சுமை அதிகமாக இருந்தாலும் நீங்கள் அதை சரிகட்டி செய்து முடிப் பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை பகிர்ந்துகொள்ள அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் நீங்கள் மகிழ்ச்சியை பராமரிக்க முடியும்.

பணஇழப்பிற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

தொண்டை எரிச்சலுக்கான சாத்தியம் காணப்படு கின்றது. குளுமையான உணவு உட்கொள்வதை தவிரத்தல் நல்லது.



## விருச்சிகம்

அதிர்ஷ்டகரமாக இருப்பீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண் பீர்கள். நீங்கள் எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

பணிகள் நலம் பயப்பதாக காணப் படும். சலுகைகளும் ஊக்கத்தொகை யும் கிடைக்க வாய்ப்பு உள்ளது. அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

நீங்கள் உணர்ச்சிப் பூர்வமாக நடந்து கொள்வீர்கள். இது உங்கள் துணையை மகிழ்விக்கும்.

உங்களிடம் போதிய அளவு பணம் காணப்படும். பயனுள்ள வகையிலும் நல்ல செயலுக்காகவும் பணத்தை செலவு செய்வீர்கள்.

ஆரோக்கியம் சிறந்த முறையில் காணப்படுகின்றது. நீங்கள் சுறுசுறுப்பாகவும் தைரியமாகவும் உணர்வீர் கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 30.06.2024




உங்கள் பொறுமை சோதிக்கப் படும். என்றாலும் மேறகொண்டு திட்ட மிடுவதற்கு அது உங்களுக்கு நன்மை தருவதாக அமையும். பிரார்த்தனை யில் ஈடுபடுவது மற்றும் மந்திரங்களை கேட்பது மன அமைதியை ஏற்படுத்தும்.

சிறப்புடன் பணியாற்றுவீர்கள். பதவி உயர்வு வடி வத்தில் பாராட்டுகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

உங்கள் புரிந்துணர்வின் மூலம் உங்கள் துணை யுடன் மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்களின் அர்ப்பணிப்பான பணி காரணமாக உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். அத்தகைய உற்சாகம் உங்களுக்கு திருப்தியை அளிக் கும்.

இன்று முழு ஆரோக்கியத்துடனும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள்.




இன்று துடிப்புடன் காணப்படுவீர் கள். உங்கள் வளர்ச்சியைக் கண்டு மகிழ்வீர்கள். இன்று பயனுள்ள முடிவு களை நீங்கள் எடுக்க முடியும்.

நீங்கள் உங்கள் பணியில் சவால் களை எதிர்கொள்வதற்கு தயாராக இருக்க வேண்டும். உங்கள் பங்கை நிறைவேற்றுவதற்கு உன்னதமான திட்டமிடல் வேண்டும்.

உங்கள் துணையுடன் நுண்ணுணர்வோடு காணப் படுவீர்கள். உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பரா மரிக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

பணவரவிற்கான சாத்தியம் இல்லை. உங்கள் நிதிநிலையை நன்றாக பாதுகாத்துக் கொள்ள வேண் டும்.

செரிமானக் கோளாறுகள் ஏற்படலாம்.




நீங்கள் உங்கள் வருங்காலத்திலும் முன்னேற்றத்திலும் கவனம் செலுத்த வேண்டும்.

பணிகளைப் பொறுத்தவரை இன்று உங்களுக்கு சாதகமான நாளாக இருக்காது. பணிச்சுமை அதிகமாகக் காணப்படும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை தக்கவைத்துக் கொள்வதற்கான நோக்கமும் ஆற்றலும் குறைந்து காணப்படும். நட்பான அணுகுமுறையைக் கையாள வும்.

பணப்புழக்கம் உற்சாகமளிக்கும் வகையில் காணப்படாது. கூடுதல் செலவினங்கள் செய்ய நேரி டும்.

மனஅழுத்தத்தின் காரணமாக கால் வலி மற்றும் முதுகு விறைப்பு போன்ற உபாதைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.




இன்றைய நாள் ஆக்கமுடைய நாளாக அமையும். சிறிய தொலை விலான பயணமும் மற்றும் சில மாற் றங்களின் காரணமாக உங்கள் தைரி யத்தையும் உறுதியையும் நீங்கள் இழக்க நேரலாம்.

குறித்த நேரத்திற்குள் கொடுக்கப்பட்ட பணியை முடிப் பது சற்று கடினமாக இருக்கும். இது உங்களுக்கு கவ லையை அளிக்கும்.

உங்கள் மற்றும் உங்கள் துணையின் இடையே தொடர்பாடலில் இடைவெளி காணப்படும். இது உற வின் சீரமைப்பை கெடுக்கும். விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்வது நல்லது.

நிதிநிலைமை சீராகவோ நல்ல முறையிலோ காணப்படாது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வது இயலாது.









### இருபது-20 உலகக் கிண்ண இறுதியாட்டத்தால்

# அதிர்ந்தது பிரிட்ஜ்டவுண்; சம்பியனானது இந்தியா!

## தென்னாபிரிக்காவின் தீராத் தாகம் தொடரும் சோகம்

இருபது - 20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதியாட்டம் பெரும் பரபரப்புக்கு முடிவுக்கு வந்தது. இதில் இந்திய அணி வென்று இரண்டாவது முறையாகவும் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது. தென்னாபிரிக்காவின் உலகக் கிண்ணத் தாகம் தீராது சோகம் தொடர்கின்றது.

இருபது - 20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரை அமெரிக்கா மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் இணைந்து நடத்தின.

இந்தத் தொடர் கடந்த இரண்டாம் திகதி தொடங்கியது. 20 நாடுகள் இந்தத் தொடரில் பங்கேற்றன. அவை 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, லீக் முறையில் போட்டிகள் நடத்தப்பட்டன. லீக் முடிவில் நான்கு பிரிவுகளிலிருந்தும் முதலிரு இடங்களைப் பிடித்த அணிகள் சூப்பர்-8 சுற்றுக்குத் தகுதிபெற்றன. அதன்படி இந்தியா, அமெரிக்கா (குழு – ஏ), அவுஸ்திரேலியா, இங்கிலாந்து (குழு – பி), ஆப்கானிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள் (குழு – சி), தென்னாபிரிக்கா, பங்களாதேஷ் (குழு – டி) ஆகிய அணிகள் தகுதிபெற்றன.

முன்னாள் சம்பியன்களான பாகிஸ்தான், இலங்கை




அணிகளுடன் நியூஸிலாந்து, நெதர்லாந்து, அயர்லாந்து, கனடா, ஸ்கொட்லாந்து, நமீபியா, ஓமன், உகாண்டா, பப்புவா நியூ கினியா மற்றும் நேபாளம் ஆகிய அணிகள் வெளியேற்றப்பட்டன.

சூப்பர்-8 சுற்றுக்குத் தகுதி பெற்ற 8 அணிகளும் 2 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. அதன்படி குழு 1இல் இந்தியா, அவுஸ்திரேலியா, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் அணிகளும், குழு – 2 இல் இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள், தென்னாபிரிக்கா, அமெரிக்க அணிகளும் இடம்பெற்றன.

இதன் முடிவில் இந்தியா, ஆப்கானிஸ்தான், தென்னாபிரிக்கா, இங்கிலாந்து அணிகள் அரையறுதிக்குத் தகுதி பெற்றன. முதல் அரையிறுதியில் தென்னாபிரிக்க அணி 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் ஆப்கானிஸ்தானை எளிதில் வீழ்த்தியது. இரண்டாவது அரையிறுதியில் இந்தியா 68 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நடப்பு சம்பியன் இங்கிலாந்தைத் தோற்கடித்தது.

இந்நிலையில் கிண்ணத்துக்கான இறுதிப்போட்டி







தொடர்ச்சி ▼



7 ஓட்டங்களால் இந்தியா வெற்றி

| இந்தியா | இருபது–20 உலகக்கிண்ண இறுதியாட்டம் | தென்னாபிரிக்கா |
|---|---|---|
| 176-7 (20) | | 169-8 (20) |

# அதிர்ந்தது பிரிட்ஜ்டவுண் சம்பியனானது இந்தியா!

தொடர்ச்சி ▲

பிரிட்ஜ்டவுனில் இலங்கை நேரப்படி நேற்று இரவு 8 மணிக்கு ஆரம்பமானது.

இதில் நீண்டகாலமாக உலகக் கிண்ணத்தை எட்ட முடியாத – தீராத் தாகத்துடன் இருந்த தென்னாபிரிக்காவும், ஏற்கனவே ஒரு முறை கிண்ணம் வென்ற முன்னாள் சம்பியனான இந்தியாவும் களம் கண்டன.

இந்தியா மூன்றாவது முறையாக இருபது–20 உலகக் கிண்ண இறுதிப் போட்டிக்கு முன்னேறியிருந்தது. 2007ஆம் ஆண்டு நடந்த முதல் இருபது–20 உலகக் கிண்ணத்தில் இந்தியா சம்பியன் பட்டம் வென்றது.

2014ஆம் ஆண்டு இறுதிப்போட்டிக்கு முன்னேறிய இந்தியா, இலங்கையிடம் தோற்றது.

இம்முறை மூன்றாவது தடவையாக இறுதிக்குத் தகுதிபெற்றுள்ள இந்திய அணி, இரண்டாவது முறையாகக் கிண்ணத்தை வெல்லும் முனைப்பில் களம் கண்டது.

அதேவேளை மறுமுனையில் மார்க்ரம் தலைமையிலான தென்னாபிரிக்கா முதல் முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறியிருந்தது. அதுவரை உலகக் கிண்ணத்தை அந்த அணியால் நுகரமுடியாமல் இருந்தது. இதனால், அந்த அணி சம்பியன் பட்டம் வென்று நீண்ட நாள் தாகத்தைத் தீர்க்கும் வேட்கையில் களம் கண்டது.

இந்நிலையில், இந்த ஆட்டத்தில் முதலில் இந்தியா துடுப்பெடுத்தாடியது. அதன்படி களமிறங்கிய இந்திய அணி, ரோஹித் சர்மா (9), பாண்ட் (0), யாதவ் (3) ஆகியோரை அடுத்தடுத்துப் பறிகொடுத்தது. ஒரு கட்டத்தில் அந்த அணி, 5 ஓவர்களுள் 34 ஓட்டங்களை மாத்திரமே சேர்த்து 3 விக்கெட்டுகளை இழந்திருந்தது.

ஒருமுனையில் விக்கெட்டுகள் சரிந்தபோதும் மறுமுனையில் நின்று ஆடிய விராட் கோஹ்லி (76) சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த, அவருடன் ஜோடி போட்ட அக்ஸர் பட்டேலும் (47) சிறப்பாக ஆடினார்.

இவர்களைத் தொடர்ந்து களமிறங்கிய டுபே (27)

தொடர்ச்சி ▼



# அதிர்ந்தது பிரிட்ஜ்டவுண் சம்பியனானது இந்தியா!

தொடர்ச்சி ▲

சிறப்பாக ஆட, ஜடேயா (2) விரைந்து வெளியேறி னார்.

இறுதியில் இந்திய அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 176 ஓட்டங்களைச் சேர்த் தது. பாண்டியா 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்தில் நின்றார்.

தென்னாபிரிக்கா சார்பாக பந்துவீச்சில் மஹராஜ், நோட்ஜே ஆகியோர் தலா இரு விக்கெட்டுகளையும், ஜன்சென், ரபடா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் 177 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக் கிக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி, ஆரம்பத் தில் சொதப்பியபோதும் பின் பாதியில் இந்திய அணிக் குப் பெரும் பதற்றத்தைக் கொடுத்தது.

அந்த அணி ஒரு கட்டத்தில் 16 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 150 ஓட்டங்களைக் கடந்து வெற்றி வாய்ப்பைப் பிரகாசப்படுத்தியது.

இந்நிலையில் சுதாகரித்து ஆடிய இந்தியா, எதிர ணியின் விக்கெட்டுகளைப் பதம் பார்த்தது. தென்னாபி ரிக்காவின் இரு விக்கெட்டுகள் அடுத்தடுத்துச் சாய, 17.4ஆவது ஓவரில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 156 ஓட்டங்களுடன் தடுமாற ஆரம்பித்தது.

பின்னர் 19.2ஆவது ஓவரில் 7 ஆவது விக்கெட்டை இழந்தது.

இறுதியில் அந்த அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 169 ஓட்டங்களை மாத் திரமே சேர்த்தது. இதனால் இந்தியா 6 ஓட்டங்களால் வெற்றி பெற்று, இரண்டாவது முறையாக கிண் ணத்தைச் சுவீகரித்தது.

தென்னாபிரிக்க அணி சார்பாக துடுப்பாட்டத்தில் டி கொக் (39), ஸ்ரப்ஸ் (31), க்ளாசென் (52), டேவிட் மில்லர் (21 - ஆட்டமிழக்காமல்) ஆகியோர் தவிர ஏனைய வீரர்கள் எவரும் இரட்டை இலக்க ஓட்டங்களைப் பெறவில்லை.

இந்தியா சார்பாக பந்துவீச்சில், அர்ஸ்தீப் சிங், பும்ரா ஆகியோர் தலா இரு விக்கெட்டுகளையும், பட்டேல், பாண்டியா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப் பற்றினர்.



ஆட்டநாயகனாக இந்தியாவின் விராட் கோஹ்லியும் தொடர் நாய கனா பும்ராவும் தெரிவானார்கள்

இந்தப் போட்டியில் வென்றதன் மூலம் இருபது-20 உலகக் கிண் ணத்தை இரண்டு தடவைகள் வென்ற அணிகள் வரிசையில் மூன்றாவது அணியாக இந்தியா இணைந்தது. ஏற்கனவே மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் இங்கிலாந்து அணிகள் தலா இரு தடவைகள் கிண்ணம் வென் றுள்ளமை குறிப்பிடத்தக்கது.




இருபது-20 போட்டிகளுக்கு கோஹ்லி

# டாட்டா

இந்திய அணி சம்பியனாக இறுதிப் போட்டியில் முக்கிய பங்காற்றிய விராட் கோஹ்லி இருபது-20 போட்டிகளிலிருந்து ஓய்வை அறிவித்துள்ளார்.

இத்தொடரின் முந்தைய போட்டிகளில் சொதப்பிவந்த கோஹ்லி, கடைசியாட்டத்தில் சிறப்பாக ஆடி இந்தியாவின் வெற்றிக்கு வழி வகுத்தார்.

அது மாத்திரமின்றி இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாகவும் அவரே தெரிவானார்.

இந்த ஆட்டத்தில் அவர் 59 பந்துகளை எதிர்கொண்டு 2 சிக்ஸர்கள், 6 பௌண்டரிகள் அடங்கலாக 76 ஓட்டங்களைச் சேர்த்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.